# சித்தன்

ஓர் உயரிய மாதப் பத்திரிகை.


| மாலை 2. | ஜனவரி 36. | மணி 1. |
|---|---|---|
| Vol. 2 | January. 36 | No. 1 |



ஆசிரியர் C. P. சாமி



OFFICE OF
21 JAN 193
MADRAS




கைத்தொழில் கல்வி மருவ

காசினியே புகழ் சி. பி. ச

எத்தகையோரும் புகழும் பழை

இனிதே சித்தா!! புத்தாண்

## உள்ளுறை. பக்கம்.


| | | |
|---|---|---|
| 1. | வாழ்த்துப்பா .... ... | 1 |
| 2. | இரண்டாம் ஆண்டு .... .... | 2 |
| 3. | காங்கிரஸ் பொன்விழா ... ... | 4 |
| 4. | செய்யுள் பகுதி .... ... | 6 |
| 5. | செய்தித் திரட்டு ... ... | 8 |
| 6. | மதலையைப் பறிகொடுத்த மாது ... | 9 |
| 7. | மரண பயம் ... ... | 14 |
| 8. | மதங்களும் மனிதசமூகமும் ... | 15 |
| 9. | ஐந்து லட்சம் ரூபாய் அதிர்ஷ்டப் பிரைஸ் | 19 |
| 10. | தெலுங்குமொழிப்புலவர் பெருமக்கள் | 27 |
| 11. | கர்ப்பத்தடை ... ... | 30 |
| 12. | நித்திரை ... ... | 36 |
| 13. | குணவாகடம் .... ... | 39 |
| 14. | இந்திய வைத்தியர் மகாநாடு ... | 41 |
| 15. | நாட்டு வைத்தியம் ... ... | 44 |
| 16. | நாகானந்தன் ... ... | 47 |


## சந்தா விபரம்.

| | | | |
|---|---|---|---|
| வருடம் 1-க்கு | உள் நாடு | ... | ரூ. 0—8—0 |
| ,, | வெளி நாடு | ... | ரூ. 1—0—0 |
| | தனிப்பிரதி | ... | ரூ 0—1—0 |

## விளம்பர விகிதம்.

ஒரு தடவைக்கு முழுப்பக்

,, அரைப்ப

கால்பக்

# "சித்தன்" புத்தாண்டு வாழ்த்து.


(மு. கா. அம்பலவாணன்)
(சமஸ்தான வித்வான், இடையகோட்டை.)


## இன்னொலிக் கலித்தாழிசை.

திருவார் தவமே நனிமா தவனே, சித்தா!! எங்கள்
திரவியமே!
திகழும் பழனப் பழனிப் பதியின் செல்வா வருக
சிகாமணியே!
உருவுங் குலனும் எழினும் நலனும் உள்ளோய் வருக!
வருகவினி
ஊழி பலவாக் கடந்து குழந்தாய் உகந்தே வாழ்கநீ
வாழியரோ!!

சமைய சமூகக் குறைபா டதனைத் தளராதெடுத்து
மொழிவோய்-நீ
தக்கன வல்லா மூடப்பழக்கந் தகர்த்து எரிவாய்
தகுதியிலா
அமைதி பெறார்க்கு இன்மொழிகூறி அணிசெய்தென்றும்
அழிகுகொடுத்
தவனியின் மீது தமிழ் மணம் வீசும் அன்பாகெடிதுநீ
வாழியரோ

கைத்தொழில் கல்வி மருத்துவ வாணிப கலைஞானம்முறை
கண்டவனே
காசினியே புகழ் சி. பி. சாமி கருத்துண் மகிழும்
கண்
எத்தகையோரும் புகழும் பழனிக் கிறைவ
பெ
ஓனிதே சித்தா!! புத்தாண் ன்பம் ெ
வா

18992

# "சித்தன்"

பழனி.

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்"

## ஓர் உயரிய மாதப் பத்திரிகை.

ஆசிரியர்— C. P. சாமி.

மாலை 2. | ஜனவரி. 1936. | மணி 1.

## இரண்டாம் ஆண்டு.

நமது சித்தனின் முதல் ஆண்டு பூர்த்தியாகி, இரண்டாம் ஆண்டு தொடங்கியிருக்கிறது. சென்ற ஆண்டில் எவ்வித இடையூறுகளுமின்றி சித்தன் உலவிவந்த விஷயம் நேயர்கள் அறிவார்கள். எத்தனையோ பத்திரிகைகள், தோன்றிய அவ்வாண்டே மறைந்துபோகின்றதைக் காண்கிறோம். காரணமென்ன? நம் நாட்டில் பத்திரிகாபிமானம் மிகவும் குறைவென்பது வெளியாகிறது. இங்கிலாந்து தேசத்தைக் கவனித்தால், அது நமது தேசத்தைக்காட்டிலும் எவ்வளவோ சிறியதாயிருந்தும் எண்ணிக்கையற்ற பத்திரிகைகள் ஆங்கே உலவிவருவதும், பிரதி பத்திரிகைக்கும் லக்ஷக்கணக்கான சந்தாதாரர்கள் சேர்ந்திருப்பதும் தெற்றென விளங்கும். அங்கே கூலிவேலை செய்பவனும்கூட ஒழிந்த நேரங்களில் பத்திரிகை வாசிக்கிறான். நம் நாட்டிலோ படித்தவனுக்கும் கூட பத்திரிகையில் பிரியமிருப்பதில்லை. பத்திரிகை படிப்பதின் பயனை மேல்நாட்டவர்கள் நன்குணர்ந்து, அதனைக் கையாண்டு, கல்வியறிவு பெற்று வாழ்கின்றனர். ஆனால் நம்மவர்களோ ஞானசூனியர்களாய், அடிமைகளாய் வாழ்



கின்றனரேயன்றி பத்திரிகை வாசிப்பதில் சிறிதும் ஆர்வமில்லாதவர்களாயிருக்கின்றனர். ஒரு தேசத்தின் முன்னேற்றத்திற்கு பத்திரிகைதான் சிறந்த சாதனமாகும். உலகியல் விஷயங்களையும், பாஷாபிவிருத்தியையும், அறிவொழுக்கங்களையும், அரசியல் ஞானத்தையும் தரவல்லது பத்திரிகையன்றோ! இதனை நம்மவர் அறிந்து பயன் பெறுவார்களாக. தாய்நாட்டின் முன்னேற்றத்தையும், தாய்பாஷையின் அபிவிருத்தியையும் கருதி பத்திரிகை வளர்ச்சியடைய உதவிபுரியுமாறு வேண்டுகிறோம்.

தமிழ்மக்கள் யாவரும் எளிதில் சித்தனைப்பெற்று பயனடையக் கருதியே ஆண்டுச்சந்தா அணா 8 என ஏற்படுத்தி இருக்கிறோம். வைத்திய உலகிற்கு வேண்டிய பல அரிய விஷயங்களை சித்தன் வெளியிட்டதுபோன்று இவ்வாண்டிலும் சுகாதாரம், வைத்தியம், கைத்தொழில்முதலிய துறைகளிலும் அதிகப்படியான நூதன ஆராய்ச்சி விஷயங்கள் வெளியிடுவானெனவும், சீர்திருத்தத் துறையில் போதிய கவனம் செலுத்துவானெனவும் நம்புகிறோம்.

மேனாட்டு நாகரீகம் தீவிரமாய்ப் பரவிவரும் இக்காலத்தில் நம் பெண்மணிகளின் முன்னேற்றத்தையும் நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டும். இவர்களுக்குத் தகுந்த அறிவும், பொருளாதார உரிமையும், சுதந்திரமும் கொடுக்காததாலன்றோ மிகவும் கேவலமான நிலையில் இருக்கின்றனர். நமது சித்தனில் மாதர் பகுதி என்ற தலைப்பில் வெளிவருகின்ற கட்டுரைகளை நேயர்கள் கவனிப்பார்களாக.

சென்ற ஆண்டில் நம் பத்திரிகைக்கு சந்தாதாரர்களாகவும், கட்டுரையாளர்களாகவும் இருந்த நேயர்களுக்கும், மாற்றுப்பத்திரிகை அனுப்பிய சகோதர ஆசிரியர்களுக்கும் மனமுவந்த வந்தனம் உரியதாகுக.

ஒரு பத்திரிகை சீரும் சிறப்புமாய் நடைபெறுவதற்கு சந்தாதாரர்களின் ஆதரவே காரணமென்று நாம் கூறவேண்டியதில்லை. இப்புது வருடமுதல் பத்திரிகையின் பக் [illegible] களை அதிகமாக்கிப் புதிய முறையில் வெளியிட உ [illegible] திருப்பதால் நேயர்கள் தங்கள் சந் [illegible] வை உடனே [illegible] வைப்பதுடன் தமது நண்பர்க [illegible] ந்தாதார [illegible] சேர்த்து சித்தனை ஆதரிக்க வே [illegible] ம். (ஆசிரியன்.)

# காங்கிரஸ் பொன்விழா.

இந்துதேச அரசியல் விடுதலையே தனது பூரண லட்சியமாய்க்கொண்டு உழைக்கும் ஸ்தாபனம் காங்கிரஸ் மகாசபை ஒன்றேதான் என்பதை இந்துதேசத்தில் பிறந்த குழந்தைகள்கூடச் சொல்லுகின்றன. இந்துதேச மக்கள் கேவலமாக நடத்தப்படுவதற்கு இந்தியா, சுதந்தரமற்றிருப்பதே காரணமாகும். ஆகையால் இந்திய விடுதலையில் கவனம் செலுத்த அதற்காக நேரிய முறையில் போராட ஒரு ஸ்தாபனம் வேண்டுமென 3, 4 இந்தியத்தலைவர்கள் ஆங்கிலேயர் உள்பட கூடி ஆலோசித்து ஆரம்பித்த ஸ்தாபனமே இன்று இவ்வளவு பெருமை வாய்ந்த மகத்தான தேசீய ஸ்தாபனமாக விளங்குகிறது.

இந்த ஸ்தாபனத்தை தோற்றுவித்த பெரியார்களும், பின் தீவிர பங்கெடுத்துக்கொண்ட வீரர்கள் அநேகரின் வெற்றுடம்பு மாய்ந்தன. "சுயராஜ்யம் என் பிறப்புரிமை; அதுவே எனக்கு வேண்டும்" என்று ஆண்மையோடு வீர கர்ஜனை செய்த தாதாபாயேனும் அல்லது அவரது சகாக்களேனும் 40-வருடங்களுக்குப்பின் தங்களால் ஏற்படுத்தப்பட்ட காங்கிரஸ் மகாசபையைச் சேர்ந்தவர்கள். ஒத்துழையாமை, சட்ட மறுப்பு, சத்தியாக்கிரகம் முதலிய வழிகளில் ஆயிரக்கணக்காகச் சிறை செல்லுவார்கள், பெண்களும் தீவிர பங்கெடுத்துக்கொள்வார்கள், தடியடி படுவார்கள், தன்னல தியாகிகளாயும், சுதந்திர வீரர்களாயும் விளங்கி, தங்கள் முயற்சியை விடாது நடத்தி, ஸ்தாபனத்தை உலகம் போற்றும்படி செய்வார்களென்று கிஞ்சித்தும் எண்ணியிருக்கமாட்டார்கள். ஆனல் அவர்கள் விதைத்த விதையானது மரமாகி, பூத்து, காய்த்து விளங்குகிறது. அப்பெரியார்களுக்கு நமது வணக்கம் உரித்தாகுக.

சென்ற டிசம்பர்-மீ 28-உ சரித்திரத்தில் குறிப்பிடத்தக்க ஓர் நன்னாளாகும். அன்றேடு காங்கிரஸ் மகாசபை ஆரம்பமாகி 50-வருடங்கள் பூர்த்தியாகின்றன. அன்றய தினத்தை இந்தியா தேசமெங்கும் ஓர் புனித தினமாகக் கொண்டாடவேண்டி தலைவர்களாலும், காங்கிரஸ் மகாசபையாலும் தீர்மானிக்கப்பட்டபடி, எல்லா நகரங்களிலும், பட்டினங்களிலும், கிராமங்களிலும், காங்கிரஸ் மகாசபையின் வருஷப்பூர்த்தி விழா (பொன்விழா) வெகு விமரிசையாய்க் கொண்டாடப்பட்டது. வெளி நாட்டிலிருந்து பாபு சுபாஷ் சந்திரபோஸ், நேரு தம்பதிகள் முதலிய இந்தியத் தலைவர்களிடமிருந்தும், ஆங்கில அபிமானிகளிடமிருந்தும் பல ஆசி செய்திகள் வந்து குவிந்தன. நிரந்தரமாக தேசமெங்கும் இவ்வைபவம் போற்றத்தக்க முறையில் கொண்டாடப்பட்டது.

## பழனியில்

பல வாலிபர்களது முயற்சியாலும், பெரியோர்களது உதவியாலும், பந்தய விளையாட்டுகள், கொடி ஏற்றம், ஊர்வலம், பொதுக்கூட்டம் முதலியன வெகு விமரிசையாய் நடத்தப்பட்டன. அன்று கடைகள் எல்லாம் அடைக்கப்பட்டன. இந்து முஸ்லீம் அனைவரும் ஏகமனதாய் பங்கெடுத்துக்கொண்டனர். கட்டிடம் ஒன்று கட்டவேண்டி அதற்கென ஒரு இடமும் விலைக்கு வாங்கப்பட்டிருக்கிறது.



## தேவை.

சித்தன் பத்திரிகைக்கு விற்பனை செய்யவும் சந்தாதாரர்கள் சேர்க்கவும் முக்கிய நகரங்களுக்கு பொறுப்பும் செல்வாக்குமுள்ள ஏஜண்டுகள் தேவை. தக்க கமிஷன் கொடுக்கப்படும். 1-அணு ஸ்டாம்புடன் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

மானேஜர்,
"சித்தன்".

# செய்யுள்பகுதி.

### சாந்தன், மதுரை.

வதியுந்தணிகையில்வாழ்வுறுமென்கண்மணியன்னார்
மதியுந்தழல்கெடமாமயின்மீதிவண்வருவாரேற்
றிதியும்புவிபுகல்நின்பெயர்நெறியைத்தெரி
னதியுந்துணவுதவுவனங்கொடிநீநடவாயே.

(திருவருட்பா)

(இ-ள்) அம் கொடி—அழகிய காக்கையே! திதியும் புவி புகல் நின் பெயர் நெறியை தெரிவிப்பான்—உலகத்தார் சொல்லும் காக்கை (காத்தல்) என்னும் உன் பெயரின் தன்மையை தெரிவிக்கும் பொருட்டு; நடவாயே— நீ தூது செல்வாயாக; வதியும் தணிகையில் வாழ்வுறும் என் கண்மணி அன்னார்—திருத்தணிகையில் பொருந்தி எழுந்தருளி இருக்கும் என் கண்மணிக்கு சமானமான முருகக்கடவுள், மதி உந்து அழல் கெட மா மயில் மீது இவண் வருவார் ஏல்—சந்திரன் வீசும் கிரணங்களின் வெப்பம் கெடும்படி மாக்ஷிமை மிக்க மயிலின் மீது இவ்விடம் வருவாரானால்; நதி உந்து உணவு உதவுவன்—நான் ஆறுகள் கொடுக்கும்படியான உணவாகிய மீன், நண்டு, நத்தை முதலியவைகளைக் கொடுப்பேன்.

(கருத்துரை) காக்கையே! உலகத்திலுள்ளோர் உன் பெயர் "காக்கை" என்று சொல்லும் பெயரின் தன்மையாகிய காக்கை (காத்தல்) தொழிலை காண்பிக்கும் பொருட்டு திருத்தணியில் எழுந்தருளி இருக்கின்ற முருகக்கடவுளினிடம் நீ தூதுபோய் அவரும் சந்திரிகையின் வெப்பம் கெடும்படி இங்கே வருவாரானால் ஆறுகள் கொடுக்கும்படியான நண்டு,



நத்தை, தவளை, மீன் முதலிய உணவுகளை நான் உனக்குக் கொடுப்பேன் என்றவாறு.

மன்றேர்தணிகையினீர்கதிதரவந்தீரோ
வென்றேனசைதருமின்றேன்மொழியாயானுன்பா
வின்றேசுரருலகெய்திடவந்தேனென்றார்காண்
குன்றேர்முலையாயென்னடியவர்சொற்குறிதானே.

(திருவருட்பா)

(இ-ள்) தேர் மன் தணிகையில் நின்றீர்—தேர்கள் நிலை பெற்றிருக்கின்ற திருத்தணிகையின்கண்ணே எழுந்தருளி இருக்கின்ற முருகக்கடவுளே!; கதி தர வந்தீரோ என்றேன்—எனக்கு நற்பதம் தரும்படியாக வந்தீரோ என்று கேட்டேன்; நசை தரும் இன் தேன் மொழியாய்—விருப்பத்தைத் தரும்படியான இனிய தேன் போன்ற தித்தித்த சொல்லை உடையவளே!; யான் உன் பால் இன்றே சுரர் உலகு எய்திட வந்தேன் என்றார்—நான் உன்னிடத்தில் சுவர்க்கம் பெற வந்தேன் என்று சொன்னார்; குன்று ஏர் முலையாய் என் அடி அவர் சொல் குறிதானே—மலையைப் போல அழகிய ஸ்தன்னியத்தை உடைய தோழியே! அவர் சொன்ன வார்த்தையின் குறிப்பு என்ன? என்றாள் தலைவி.

(கருத்துரை) சுரர் உலகு என்பது சுவர்க்கம். இந்த சுவர்க்கம் ஸ்தனத்திற்கு ஏற்பட்ட பெயர்களில் ஒன்று.

வியாபார அபிவிருத்திக்கு
'சித்தனில்'
விளம்பரஞ் செய்யுங்கள்.

# செய்தித் திரட்டு.

ரோமாபுரிக்கு சமீபத்தில் சிலர் ஒரு சுறாமீனைப்பிடித்தார்களாம். அதன் வயிற்றில் ஒரு டின் பெட்ரோல் இருந்ததாம். அதிலும் அந்தப் பெட்ரோல் கெட்டுப்போகாமல் இருந்தது மிகவும் விசேஷமாம்.

❖ ❖ ❖

ஊபெக் என்னுமிடத்தில் வசித்துவரும் ஸ்ரீமதிசோபியா சுமால் என்பவருக்கு சுமார் 87-வயதாகிறதாம். அவருக்கு சுமார் 129-மக்கள், பேரன் பேத்திமார்கள் இருக்கிறார்களாம்.

❖ ❖ ❖

புடா பெஸ்ட் நகரிலுள்ள ஒரு முக்கிய வீதியில் போலீஸ் பொம்மையொன்றை நிறுத்தி அதன் உதவியால் போக்குவரத்தை சீர்படுத்தி வருகிறார்களாம். அந்த பொம்மை உயிருள்ள போலீஸ்காரனைப்போல் மோட்டார்களையும் வண்டிகளையும், நிறுத்தியும், போகும்படி சமிக்ஞை செய்தும் வருகிறதாம் அதன் ஒரு கையில் மின்சார விளக்கும், முதுகில் டெலிபோனும் இருக்கிறதாம் வீதியில் ஏதேனும் ஆபத்து அல்லது நெருக்கடி ஏற்பட்டால் பக்கத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்குடெலிபோன்மூலம் அறிவிக்கிறதாம்

❖ ❖ ❖

போலந்து தேசத்தில் பெண்களையும் போலிஸ்படையில் சேர்த்து வருகிறார்களாம். இவர்கள் நம் நாட்டு பி. ஏ. வகுப்புக்குச் சமமாக கல்வி கற்றிருக்கின்றார்களாம். இவர்களுக்கு ஊதாவர்ணத்தில் வெள்ளிப் பொத்தான்களுடைய உடைகள் வழங்கப்பட்டிருக்கிறதாம். இவர்கள் போலீசில் சேரும் பொழுது 7-வருஷத்திற்கு கலியாணம் செய்துகொள்வதில்லை என்று வாக்குறுதி செய்ய வேண்டுமாம். இல்லையேல் அவர்களுக்குபென்ஷனும் உபகாரச்சம்பளமும் கிடைக்காதாம். தெருக்களில் பெண்களையும் குழந்தைகளையும் காப்பாற்றுவதே இப்படையின் வேலையாம்.

---

# மதலையைப் பறிகொடுத்த மாது

அல்லது

# வறுமைநீங்கிய வாலிபன்!

புதுவை, **R. S.** ராஜலக்ஷ்மி.

மதுரை வைகை ஆற்றுக்கருகிலுள்ள அண்ணாத் தோப்புத் தெருவின் கோடியில் ஒரு சிறு வீடு ஒன்று காணப்பட்டது. அதன் கூரையில் ஆயிரத்தெட்டு துவாரங்கள் இருந்தன. சுற்றுப்புறச்சுவர் பாதி இடிந்தும், பாதி விழுந்ததுமாயிருந்த சின்னங்களானது வீட்டில் வசிப்பவரது ஏழ்மை நிலையைக்காட்டின. அவ்வீட்டில் தரித்திரப் பேய் தலைவிரித்து தாண்டவமாடியது. அங்கு கூலிவேலை செய்துபிழைக்கும் முருகனும் அவன் மனைவியும் இரண்டு வயது பாலகனுந்தான் வசிப்பவர்கள்.

முருகன் திரண்ட செல்வத்துடன் வாழ்ந்திருந்தவன். பங்காளிகள் சொத்தைப் பறித்துக்கொண்டதனால் ஏழ்மை நிலையை அடைந்துவிட்டனன். அன்றாடகம் கூலிவேலை செய்து நிம்மதியாகக் காலங்கழித்து வந்தான். ஆனால் தற்போது உலகினில் நிலவிவரும் வேலையில்லாக்கஷ்டமானது சின்னாட்களுக்குள் நமது முருகனையும் பிடிக்கத்தொடங்கியது. காரணம் என்னவெனில் தற்கால நவீன நாகரீக உலகில் மனிதர் செய்யும் வேலைகளை எல்லாம் இயந்திர பூதங்களே செய்யத்தொடங்கிவிட்டன. முருகன் வேலைசெய்து வந்த இடத்திலும் அநேகர் வேலையினின்றும் நீக்கப்பட்டனர். முருகனும் இக்கதிக்கு ஆளாயினான். பின், பற்பல இடங்களில் அலைந்து திரிந்து குறைந்த கூலிக்கு சம்மதித்தும் வேலை கிடைக்காது மிக்க துயரக்கடலில் ஆழ்ந்தான்.

குடும்பச் சிலவுக்கு மிகவும் தயக்கமேற்பட்டது. தன் மனைவி, நாகு அணிந்திருந்த நகைகளை ஒவ்வொன்றாய் விற்று சின்னாள் ஜீவனம் செய்துவந்தான். அவைகள் யாவும் தீர்ந்தவுடன் வீட்டிலுள்ள தட்டுமுட்டுச் சாமான்களையும் விற்று பின்னும் சில நாள் காலங்கழித்தனன். உடுத்தி இருந்த ஆடைதவிர வேறொன்றுமே மீதியில்லை. முருக

னின் குழந்தையானது பசி தாங்காது கதறுகிறது. இந்நிலையில் முருகனும் அவன் மனைவியும் அடைந்த மனோவேதனை இவ்வளவென்று சொல்லவியலாது.

முருகன் தன் மனைவியை நோக்கி "நாம் இனி உணவுக்கு என்ன வழி தேடலாம், கையிலொரு காசுமில்லை. கடன் கொடுப்பார் யாருமில்லை. மூன்று நாளாய்த்தான் பட்டினி கிடந்தாய்விட்டது. இனிமேல் தாங்க முடியாது. இதற்கு ஏதாவது வழி கிடையாதா" என்று கம்பிய குரலில், துக்கம் தொண்டையை அடைக்க ஒரு கேள்வி விடுத்தனன்.

இதைக்கேட்ட நாகம்மாள் கண்ணீர் பெருக 'ஐயோ! நான் என்னசெய்வேன். தாலியைமுதற்கொண்டு விற்றுவிட்டோம். வீட்டிலொரு துரும்புகூட கிடையாதே. அண்டை அயலில் சென்று கேட்டாலும் யாரும் ஒன்றும் கொடுக்க மாட்டார்களே. தாங்கள் நாளொன்றுக்கு பத்தணாவுக்குக் குறையாமல் சம்பாதித்தீர்கள். காலத்தை சுகமே கழித்து வந்த குடும்பம் இப்பொழுது இப்படித்தவிக்கிறது. ஐயோ! இதுவும் தெய்வ சம்மதமா. அகிலமுள்ள உயிரனைத்திற்கும் உணவளித்துப் பாதுகாக்கும் ஆதிபராபர வஸ்துவாகிய மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் நம் வறுமையைக்கண்டு இறங்காததென்னே! நான் எங்கேயாவது சென்று, யார் காலையாவது பிடித்துக் கெஞ்சி ஏதாகிலும் வாங்கிவருகிறேன். குழந்தை சந்திரனை ஜாக்ரதையாகபார்த்துக்கொண்டிருங்கள்" என்று கூறிவிட்டு அக்குடிசையை விட்டு நாகம்மாள் வெளிக்கிளம்பினாள்.

முருகன் தன்னருங்குழவியை மடியில் வைத்துக் கொண்டு அதன் முகத்தை உற்று நோக்கினான். சந்திரன் என்ற பெயருக்கேற்ப பொலிவுற்று விளங்கிய அதன் வதனம் தற்போது சோர்வுற்றிருந்தது. கண்கள் இரத்தமின்றி வெளுத்திருந்தன. பசி பொறுக்காமல் தேம்பித் தேம்பி அழுகிறது. முருகன் தான் முன் வாழ்ந்துவந்த நிலையையும் தற்போது அனுபவிக்கும் கொடுந்துன்பத்தையும் நினைக்கலுற்றான். தன் மடிமீதமர்ந்துள்ள தனது அருமந்த குழவியை உற்று நோக்கி ஆ! எவ்வித சூது, வாது, கபடம் ஒன்றுமறியாத ஓர் பச்சிளங்குழவி பசியால் வாடி வதங்கிச் சோர்வடைகிறதே என நினைத்து நினைத்து மனச்சோர்வு



அடைந்தான். அதோடு பசி மயக்கம் ஒருபுறம். தலை சுற்றியது. வெளியில் சென்ற மனைவியோ இன்னமும் வந்தபாடில்லை. என் செய்வான்? மயக்கமாய் ஸ்மரணையற்றுத் தரைமீது சாய்ந்தான்.

அவ்வமயம் நாகம்மாள் கையில் சிறிது உணவுடன் உள் நுழைந்தாள். கணவன் நிலையைக்கண்டு பிரமித்து முருகனை பரபரப்பாய்த் தூக்கி மடியில் வைத்து உணவு உட்கொள்ளுமாறு வேண்டினாள். முருகன் வாயில் நுரை தள்ளியது; கண்கள் சொருகியது; உடல் பதரியது; கடைசி முறையாக அவனது கூரிய கண்கள் தனது அருமை மனைவியின் முகத்தை உற்று நோக்கின. மறு நிமிடமே கண்கள் மூடிக்கொண்டன. முருகனின் உடல்வேறு உயிர் வேறாயின. அனாதையான நாகம்மாள் திக்கற்றுத் தவிக்கலானாள்.

§ § § § §

வருடங்கள் பல கடந்தன. ஒரு நாள் சென்னையில் சாலை ரோட்டு வழியாக சுமார் பன்னிரெண்டு வயதுடைய சிறுவனொருவன் கண்ணீர் பெருக நடந்துகொண்டிருந்தான். இச்சிறுவனைக்கண்ட ஓர்மாது, அவன்மீது இரக்கங்கொண்டு, அவனை அழைத்து "அப்பா நீ யார்? எங்கு வசிக்கிறாய்? உனக்கு நேர்ந்த துன்பம் யாது" என்று வாஞ்சையுடன் வினவுவாளாயினள். "அம்மா! நான் ஒரு வியாபாரியின் குமாரன். என் தந்தையைத்தவிர வேறுதவி யாருமில்லை. அவரும் விண்ணுலகடைந்தனர். நான் வேலைசெய்துவந்த இடத்தினின்றும் விலக்கப்பட்டேன். நிர்க்கதியானேன். என் செய்வேன்" என்று கூறிய வண்ணம் கண்ணீர் ஆறாகப் பெருக கதறினான்.

இம்மொழிகளைக்கேட்ட அம்மாதுக்கு பழைய நினைவுகள் எல்லாம் மனக்கண் முன் தோன்ற ஆரம்பித்தன. "ஐயோ எனது ஆருயிர்ச் செல்வமே! நீ உயிருடன் இருந்திருந்தால் இச்சிறுவனைப்போல் வளர்ந்திருப்பாயே. நான் கொடுத்து வைக்காத பாவியானேன். வறுமையின் கொடுமையால் எனது நாதனையும், எனது செல்வக்குமாரனையும் இழந்தேன். பாவி நான் மட்டும் உயிருடனிருக்கிறேன். என் கண்ணே! உன்னை இனி காண்பது எப்பொழுதோ" எனக்கூறி பிரலாபித்தவளாய் சிறுவனை நோக்கி "அப்பா குழந்தாய்! வருந்த

வேண்டாம். நான் உன்னைப்போலொரு பாலகனைப்பறிகொடுத்தேன். எனக்கு உன் மீது என்னையறியாது ஓர் வாஞ்சை ஏற்படுகிறது. நீ என் துயரத்தைப்போக்கி, உன் கவலையையும் ஒழித்து என்னுடனே வந்து இன்பமாகக் காலங்கழி எனத்தேற்றி அன்பாகத் தன்னில்லம் அழைத்தேகினாள்.

பெற்றெடுத்த பாலகனைவிட அச்சிறுவனை மிக்க அன்புடன் வளர்த்துவருவாளாயினள். அவனைக் கல்விச்சாலையிலும் சேர்த்தனள். சிறுவனும் உற்சாகமாகக் கல்வி கற்று தினே தினே அபிவிருத்தி அடைந்துவந்தான். அம்மாது தனக்கு தொழிற்சங்கத்தினின்றும் கிடைக்கும் சொற்ப ஊதியத்தினுதவியால் சிறுவனோடின்பமாகக்காலங்கழித்து வந்தனள்.

* * *

எட்டு வருடங்கள் மாயமாய் ஓடி மறைந்தன. ஒரு நாள் ஓர் பெரியவர் நாகம்மாள் வீட்டைத்தேடி வந்தனர். வந்தவர் நாகம்மாளை நோக்கி குழந்தை சந்திரன் சௌக்கியமா? அவன் எங்கே? அவனை யான் காணவேண்டுமென்று மிக ஆவலுடன் வினவினார். வந்த மனிதர்தான் முருகனின் சொத்தை வஞ்சகமாய் அபகரித்த அவனது சகோதரர். சற்று நேரம் கூர்ந்து கவனித்து அவரை இன்னாரெனத் தெரிந்துகொண்ட நாகம்மாள் மிக்க வருத்தத்துடன் ஐயோ! சந்திரன் மூன்று வயது குழவியாயிருந்தபோது மற்றும் பல சிறுர்களுடன் விட்டு விட்டு தான் ஆற்றுக்கு ஸ்நானத்திற்குச் சென்று திரும்பிவந்ததும் குழந்தை காணப்படாததால் எங்கெங்கும் சுற்றி அங்கு வந்ததையும், அவ்விடம் அனாதையாய்த் திரிந்த சிறுவனொருவனை சந்திரனைப்போல பாவித்து வளர்த்து வருவதாயும் சவிஸ்தாரமாகக்கூறி தன் வளர்ப்புப் புதல்வனையும் அருகில் அழைத்துக் காண்பித்தனள். அச்சமயம் ஒரு கார் அவ்வீட்டு வாயிலில் வந்தது. ஓர் உபாத்தியாயர் அதிலிருந்து இறங்கி "இவன்தான் உனதாருயிர்க் குமாரனான சந்திரன். காணாமற்போனவன் இவனே" என்று கூறினார். ஆ! இவனா என் மகன்! என்று ஆனந்தக்கடலில் மூழ்கி சந்திரனைக்கட்டி அணைத்து முத்தமிட்டாள்.

உடனே அந்தப்பெரிய மனிதர் பின் வருமாறு கூறலுற்றார். "அம்மா! பணவெறிகொண்ட நான், உன் குழந்



தையை ஒருவருமறியாமல் அபகரித்துக்கொண்டுவந்து இவ்விடம் ஓர் பெரிய வியாபாரிக்கு விற்றுவிட்டேன். இவனைத் தன் சொந்தப்புத்திரனைவிட பன் மடங்கு சிறப்பாகச் சில ஆண்டுகள் வளர்த்து வந்து இவனது பன்னிரெண்டாம் வயதில் அவர் உயிர்நீத்தார். இறக்குந்தருவாயில் என்னை அருகில் அழைத்து தன் சொத்தை இவன் பேருக்கு எழுதிவைத்திருப்பதாயும், இவன் மேஜரானவுடன் இவனிடம் ஒப்படைக்கும்படியும் கூறினார். இந்நிகழ்ச்சிகள் முழுதும் இக்கல்லூரி உபாத்தியாயர் நன்கறிவர். இவனை அவ்விடத்தினின்றும் துரத்திவிட்டேன். பின்னர் இவன் ஓர் ஷாப்பில் வேலை பார்த்துவந்தான். அங்கிருந்தும், நீக்கும்படி செய்தேன். முடிவில் பெற்றவளிடமே பிள்ளை சேர்ந்துவிட்டது. இவ்வளவு துன்பத்துக்காளாக்கிய என்னை முழுமனதுடன் மன்னிக்கவேண்டும்" என்று உண்மையை வருத்தத்துடன் மொழிந்தார்.

உடனே பெரியவர் சந்திரனிடம் இருபதினாயிரம் ரூபாய் பெருமானமுள்ள 'செக்' ஒன்றைக்கொடுத்து இதனை வைத்துக்கொண்டு இனியேனும் சுகமாக வாழக்கடவாய் என்று சந்தோஷமான முகத்துடன் ஆசி கூறினார். சந்திரனும் இதுகாறும் தன்னை வளர்த்துவந்தவள் தனதருமைத் தாயே என அறிந்து அளவிலா மகிழ்ச்சி அடைந்தனன். நாகம்மாளும் கவலையை ஒழித்து களிப்படைந்தாள். பின்னர் நல்ல ஓர் சுப முகூர்த்தத்தில் ஒப்பற்ற அழகுவாய்ந்த ஓர் சுந்தரியை சந்திரனுக்கு மணம்முடித்துவைத்து எல்லோரும் இன்புற்று வாழ்ந்திருந்தனர். பொறுத்தவர் பூமி ஆள்வார் என்பதுபோல் இத்தொழிலாளர்களின் பொறுமை அன்றோ அவர்களுக்கு இவ்வுயர்வை அளித்ததென்பதில் ஐயமுண்டோ?

---

ஸ்ரீ பழனி ண்டவர்
சந்தனம், விபூதி, த்தப்பிரசாதம்
அனுப்பித்தர 6-அணா ஸ்டாம்பனுப்புக.
S.V. ராஜப்பா, மலைக்கோவில் மிராஸ், பழனி. S. I.

# மரண பயம்.

(புதுக்கம்பர் - ரா. க. பூமிபாலகதாஸ் கவிராயர்.)

வீர சுதந்திரம் — என்ற பாரதியார் மெட்டு.

1. மரண பயங்கரம் மனதில் எண்ணாதே
மற்றொருவர்க் கடிமை வாழ்வு பண்ணாதே
திரண மென்றுயிரினைச் சிந்தையிற் கொள்ளு
செத்திடு வோமென்ற புத்தியைத் தள்ளு (மரண)

2 இருட்டைக் கண்டால் கண்ணிற்பேயென்று பயக்குறாய்
இருட்டு விடிந்ததெனில் எவரையும் மயக்குறாய்
அரட்டும் இடிச்சப்தத்தில் ஆவென்று குழறுறாய்
அர்ச்சுனா அர்ச்சுனா வென்று வாய் உளறுறாய் (மரண)

3. பிறந்தவர் இறப்பது நிரந்தரம் உறுதி
பிணக்குற மனதினில் உனக்கென்ன மறதி
அவனியில் இன்பம் அடைந்திடக் கவர்ச்சியே
அவரவர் முயற்சியே ஆக்கு நல்லுயர்ச்சியே (மரண)

4. ஜென்ம மெடுத்ததே தேசத்தின் சேவைக்கே
செத்தொழிந்தாலும் பேர் ஸ்திரமுண்டுந் தேவைக்கே
புன்மைகொள் சுயநலம் பொருந்திடல் தீது
புதுக்கம்பன் பூமிபால கவிச் செஞ்சொல் ஓது. (மரண)

# மதங்களும், மனித சமூகமும்.

(திரு. மு. க. அம்பலவாணன்.)

மதம் என்பதற்கு பலர் பலவாராக அர்த்தம் கொள்ளினும், மதங்களும் மனித சமூகமும் என்றதில் மதம் என்பதற்குப் பலதிரப்பட்ட குணபேதத்தையுடைய மக்கட் கூட்டத்தினர் ஓரே கொள்கையை ஏகமனதாக ஒப்புக்கொள்வதே மதம் என இக்கட்டுரையை வரைவான் துணிகின்றேன்.

அன்பார்ந்த "சித்தன்" வாசகர்களே!

உலகம் ஆண்டவனின் உத்யானவனம். இவ்வனத்தை இரு பெரும் பகுதிகளாகப் பிரிக்கலாம். அவை உயிருடைப் பகுதி, உயிரில்லாப் பகுதியாம். இவ்விரு பகுதிகளும் ஆண்டவனின் அருட் சக்தியில் அடங்கியிருக்கின்றன. இவற்றை இயற்கைப் பொருளென இயம்பலாம். இவ்வியற்கைப் பொருள்களின் அரும் பெரும் ஆற்றலைத் தாம் முற்றும்உணர்ந்த முனிபுங்கவரே வருணிக்கத் தகுந்தவர். சர்வ வல்லமையுள்ள ஆண்டவன் ப்ரிதிவு, அப்பு, தேயு, வாய்வு, ஆகாயம் என ஐம்பெரும் பூதங்களையும், சூரியன், சந்திரன், நக்ஷத்திரம் முதலிய கிரகங்களையும், வானளாவிய உன்னத மலைகளையும், நீர் நிரம்பிய கான்யாறுகளையும், மரம் செடி, கொடி, புல் பூண்டு முதலிய தாவரவர்க்கங்களையும், ஊர்வன, நடப்பன, பறப்பன, நீர்வாழ்வன முதலியஐயறிவுடைப் பொருள்களையும், நன்மை இன்னது தீமையின்னது என்ற பகுத்தறிவுடைய மக்கட் கூட்டத்தினரையும் படைத்திருக்கின்றார். இத்தகைய படைப்பின் அரும் பெரும் நோக்கத்தின் உயர் பெருந்தன்மையை, தீர்க்கதரிசிகளாய் விளங்கிய சைவ சமயாசாரியர்களும், புத்தர், கிறிஸ்து, முஹமது நபி போன்ற பெரியார்களே முற்றும் உணர்தற்குரியவராவர். இம் மகான்களையே ஆண்டவனின் திருத்தூதுவர்களாகப் போற்றுகின்றோம். இப்பெரியார்கள் திருமறை, திருக்குரான்

முதலிய வேத நூற்களை "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று உலகமக்கள் உய்யுமாறு போதிப்பாராயினர். இப்பெரியார்களின் ஆத்மசக்தியாலேயே இப் பாரத உலகின்கண் மதஸ்தாபனங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அம்மதம், ஆஸ்திகம் நாஸ்திகம் என இரண்டாம். இவற்றுள் ஆஸ்திகம் இப்பிரபஞ்சத்துக்குக் காரணனான இறைவன் ஒருவன் உண்டென்னும் கொள்கையையே மேற்கொண்டிருப்பது. நாஸ்திகம் அங்ஙனம் காரணனாகிய கடவுள் ஒருவன் இலனென்ற கொள்கையையே மேற்கொண்டிருப்பது. சைவம், வைணவம், இஸ்லாம், கிறிஸ்து, முதலியன ஆஸ்திகத்தின் பாற்பட்டன. உலோகாயதம், பௌதிகம், பரமாணுவாதம், பரிணாமவாதம், சீதாபாசவாதம் சூனியவாதம், பிரயோசனவாதம், சாங்கியவாதம் என்பன நாத்திகத்தின் பாற்பட்டன. மேற்கூறியவற்றிற்கிடையில் சந்தேக மதம் என்பன ஒன்றும் இருக்கின்றன. அவை புத்தம், மீமாம்சமாம். இவை இப்பிரபஞ்சத்தின் நிகழ்ச்சிகட்கெல்லாம் காரணர் எனப்படும் கடவுளை நாம் எப்போதாயினும் கண்டதில்லை. அவரைப் பிரபஞ்சமெங்கும் தேடி, நாடினருமில்லை. ஆதலால் கடவுள் ஒருவர் இருக்கிறார் எனச் சாதித்தலும் சாலாது, அவரை இல்லையென்று வாதித்தலும் ஏலாது. அவரது உண்மையைக்குறித்துச் சந்தேகமாத்திரையில் நிற்பதே நாம் செய்யத்தக்கது. கடவுளைப்பற்றிய கவலை நமக்கு வேண்டுவது இன்று நாம் செய்யும் ஒவ்வொரு காரியமும் தீமையை விலக்கி நன்மையையே மேற்கொண்டிருக்கவேண்டுமென்பன போன்ற கொள்கையையுடையது.

தற்காலம் சீர்திருத்த உலகில் மக்களுக்கு மதம் அவசியமா என்று கேள்வி கேட்கப்படுகின்றன. இவ்வினா தொன்றுதொட்டே நடந்து வந்திருக்கின்றன. இவை நம் தாயகத்துக்குப் புதிதன்று. இம்மதம் காலச் சக்கரத்தின் அதிவேகச் சுழற்சியால், ஒவ்வோரு காலத்து பல்வேறு திரிபுடையதாயும், துருப்பிடித்ததாயும், தன்னோடு பிறிதும், பிறிதோடு தானும் தழுவுதலுடையதாய் கலந்து வந்திருக்கின்றனவென்பதை சிற்சில சரித்திரங்களின் வாயிலாய் உணரலாம். இத்தகைய சம்பவம் அவ்வம்மதங்களின் தலைமையாளர்களின் தவறுதல்களாலேயே நடந்துவந்திருக்கின்றன. மதஸ்தாபனங்கள் ஓர் உன்னத லக்ஷியத்தை



உலகினர்க்கு உணர்த்தவே அக்காலத்துப் பேரறிஞர்களால் ஸ்தாபிக்கப்பட்டன. அத்தகைய ஸ்தாபனங்கள் பின்னர் தம் கடமையைச் செவ்வனே ஆற்றாது வாளாவிருத்தலினால் மேற்கூறிய சம்பவங்கள் நடந்துவந்திருக்கின்றன (நடந்தும் வருகின்றன) வென்பதூஉம் ஒரு தலை. உலகிற்றோன்றிய ஒவ்வொரு மதமும் தாம்தாம்கண்ட கடவுளையே சிறப்பித்துக் கூறுவனவாகும். இஸ்லாம் மதத்தினர் அல்லாஹு என்றும், கிறிஸ்து மதஸ்தினர் பரமபிதாவென்றும், சைவ சித்தாந்தம் சிவமென்றும், வைணவர் நாராயணனென்றும், வேதாந்திகள் பிர்மமென்றும் போற்றுகின்றனர். இக்கூற்று பொன் ஒன்று, பணிதி பலவாம் என்ப. இம்மதங்கள் நாளேற தம் தம் மதத்தில் தான் உண்மையுளது, தாம் தாம் கண்ட கடவுள் தான் தலைவன் என்ற தகமையில் பல உயர்வு தாழ்வுகளை கற்பிப்பதாயின. இக்கூற்று அந்தகர் கண்ட யானையை ஒக்கும். மேற்கூறிய கூற்றில் மக்கள் ஒருமையில் பன்மை காண்பதே நேர்மையுடையதாகும். இம்மதங்கள் உலகில் ஒழுங்குபெற நடத்தற்கு ஆண்டவனின் அருள் வழிநின்றொழுகும் மகான்கள் அவ்வப் பாஷைகளில் திருமறைகள் பலவற்றைத் தொகுத்திருக்கின்றனர். இம்மறைகள் இறைவனின் தனிப்பெருந்தகையையும் மக்கட்கூட்டத்தினற்கு விதிவிலக்குகளையும் போதிப்பன. இம்மறைகள் ஆண்டவனின் அருள் வழிகண்டு நுணுகி ஆய்ந்து அவன்பாற் நெருங்கிய தொடர்பு பூண்ட பேரறிஞர்களின் அனுபவவாயிலாற் றெரிவித்த மந்திரமொழியாம். மதங்கள் காலவேறுபாட்டால் சில மாறுதலடைதலேபோல், வேத நூற்களினும் சில புதியகொள்கைகளை மனிதர்கள் புகுத்தல் கூடும். வேதத்தினின்றும் சிறிது மாறுபட்டதே ஆகமம். இவ்விரண்டின் ஒழுக்க நிலைகளைத் தழுவியே புராணம் இதிகாசம் என்பனவற்றைக் கற்றுய்ந்த புலவர்களால் வகுக்கப்பட்டன. நம் தாயகத்து அறிவுடைப் பெரியார்களின் திருச்சரித வரலாறுகளே புராணமென்றும், காவியம் என்றும் சொல்லப்படுகின்றன. இத்தகைய புராணங்களை தற்கால சீர்திருத்தக்காரர்கள் ஒருங்கே ஒதுக்கித்தள்ளுகின்றனர். அவற்றிற்குறிய காரணம் சிலவற்றைக் கீழே கூறுதும். புராணங்கள் சிற்சில இடங்களில் சுருதி யுக்தி அனுபவம் இயற்கை என நான்கி[illegible]ருந்தா முறையில் கூறுகின்றன. அவ்வவ்விடங்களை அறிஞர்கள் முறையே ஒதுக்கிவிடு

வதும்நன்றேயாம். உதாரணமாகவால்மீகிகூறியராமாயணத்தில் ராமஜெனனம், கம்பர் கூறிய ராமாயணத்தில் சுருதிக்கு ஒத்ததாயில்லை. எவ்வகை எனில், தசரதர் புத்திரப் பேறு கருதி மஹரிஷிகளைக்கொண்டு அஸ்வமேதயாகம் செய்வான் வேண்டி பலதிறப்பட்ட யாகப் பசுக்களையும் சோமபான முதலியவற்றையும் தயார்செய்து, மேற்குறித்த யாகத்தில் பட்டமகிஷி கௌஸல்யாதேவி ஒரு குதிரையை தன் கைவாளால் துண்டித்து ஒருநாளிரவு முழுதும்செத்த குதிரையோடிருந்து பின்னர் 'ரித்விக்யு' என்ற யாக கர்த்தாக்களிடம் ராஜபத்தினிகளை ஒப்படைத்து சக்ரவர்த்தியார் யாக கர்த்தாக்களுக்கு வேண்டிய திரவியங்களைக் கொடுத்து தம் தர்ம பத்தினிகளைப் பெற்றார். அதன் பின்னரே சக்ரவர்த்தியார் புத்திரப்பேறடைந்தார்என்பதைக்கவியரசன் கம்பர் மாற்றி தசரதர் புத்திர காமேஷ்டியாகம் செய்து அந்த யாகத்தில் எழுந்த அமிர்தத்தை தன் தர்ம பத்தினிகட்கு பகிர்ந்து கொடுத்து இவ்வமிர்தத்தின் நற்பலனால் ராஜபத்தினிகள் கர்ப்பமுற்று ராமன் முதலிய நான்கு புத்திரர்களை பெற்றனர் என்பதும், தசரதர் 60,000-ஆண்டுவரை அரசு செலுத்தினரென்பதும், மேற்குறித்த காலத்திற்குப்பின் ராஜபத்தினிகள் புத்திரப்பேறடைந்தனரென்பதும் இயற்கைக்கும் அனுபவத்திற்கும் ஒத்ததாயில்லை. ஜானகிதேவி தன்னோடு பிறந்த வில்லை விளையாட்டாக எடுப்பதும் பிடிப்பதுமாயிருந்ததை, இராவணனும் இலங்கை அரசன், பிராட்டியார் சுயம்வரத்தில் அவ்வில்லை வளைக்கலாற்றாது அவமானமடைந்து போன அவ்வரக்கன், பிறிதோர்கால் ஜானகிதேவியை மயிர் பிடித்து இழுத்து மடிமீதேற்றி இலங்கைக்கு ஏகினனென்பது எவ்வாற்றானும் யுக்திக்குப் பொருந்தா. ஆகவே புராணங்கள் அவ்வப்போது உலகமக்களின் பழக்கவழக்கங்களுக்கேற்றவாறு சிறிது திருத்தியும் புதுக்கியும் பல கற்பனைகளோடு கூடியவாம். ஆகவே மக்கள் புராணங்களை எழுத்தெண்ணி ஒப்புவதும் அறவே விலக்குதலும் கூடாவாம். சுருதி, யுக்தி, இயற்கை, அனுபவம் இவற்றிற்குப் பொருந்துவனவற்றையும், மக்களின் பழக்கவழக்கங்கட்கு ஒழுக்க முறைகளைப் போதிக்கும் நீதிமார்க்கங்களையும் யாவரும் ஒப்பவேண்டுமென்பது மகாத்மா காந்தியடிகள் போன்றவர்களின் நல்ல அபிப்பிராயமும் ஆகும். (தொடரும்)

# ஐந்து லட்சம் ரூபாய் அதிர்ஷ்டப் பிரைஸ்!

( ஆசிரியர் S. சிவனேயா. )

ஓர் நாள் மாலை 5-மணிக்கு எனது சிறு குடிசையின் திண்ணை ஓரமாக என் மனக்கவலையில் சிக்குண்டு ஒன்றுமறியாது பூமியைக் கையால் கீறியவண்ணமாக யான் உட்கார்ந்து கொண்டிருந்தேன். அவ்வமயம் எனது மனைவி மரகதம் "நாதா! ஏன் பெருஞ்சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறீர்கள். நம்மைப்போன்று இராப்பட்டினி கிடந்துழலுங் குடும்பங்கள் நம் நாட்டில் எத்தனை இருக்கின்றன. அவர்களுள் நாமும் ஒன்று. இதற்காக விடாக்கவலையில் ஆழ்ந்து மாய்வதால் யாது பயன்? இன்று அடுத்த வீட்டு அம்புஜத்திற்கு நெல் குத்திக்கொடுத்து அதனால் கிடைத்த ஒரு படி நொய்யரிசியைக் கூலியாகப் பெற்றுவந்திருக்கிறேன். அதைக்கொண்டு கஞ்சிவைத்து நமது குழந்தைகளும் நாமுமாக உண்டு இந்த இரவைக் கழித்து, விழித்தெழுந்து விடியற்காலையில் மற்றவைகளைப்பற்றி யோசித்துக்கொள்வோம்" என்றாள். இவ்வாறுதல்மொழியைக்கேட்ட என் செவிகள் அமைதியடைந்ததாயினும் எனது உள்ளத்தை ஈர்த்து ஆர்ப்பரித்து மேலெழுஞ் சிந்தனை அடங்கியதாகக் காணவில்லை. அத்துக்கத்தின் செயல் என்னையுமறியாது எனதில்லாளிடம் கீழ்க்கண்டவாறு இயம்புவதாயின. "எனதாருயிர்க் கண்ணே! நமது குடும்பத்தில் நம்மிருவரிடையே ஆணும்பெண்ணுமாக ஐந்து குழந்தைகள் இருக்கின்றன. நாமிருவரும் இரவு பகலாய் ஓயாது உழைத்து இன்னாள்வரை ஒருவாறு குடும்பத்தை நடத்திவந்தோம். இதற்கிடையில்இராப்பகல் பட்டினிதேவதையை எத்தனை நாட்கள் நாமிருவரும் சேவித்திருக்கிறோம். இக்கொடுமையும் போதாதென இன்று பாங்க் மானேஜர் அவர்கள் என்னை வேலையிலிருந்து நீக்கிவிட்டார். இந்த பியூன் வேலையிலிருந்தேனும் எனக்கு மாதாமாதம் ஆறு ரூபாய் சம்பளம் கிடைக்கிறதென்ற மன மகிழ்ச்சியோடு

இருந்து வந்தேன். அதுவும் இன்றோடு முடிவடைந்தது. இனி உன்னையும் மக்களையும் எவ்வாறு காப்பாற்றுவேன்" என்று கண்களில் அருவி சோரச்சொல்லி முடிப்பதற்குள் துக்கம் தொண்டையை அடைத்துக்கொண்டது.

இவை யாவும் கவனமாகக்கேட்ட எனது காதலி ஒன்றுமே இயம்பாது பத்து நிமிடம் வரை மௌனமாக என்னையும், குழந்தைகளையும் நோக்கியவண்ணமாக இருந்து "எனதினிய காதலரே! வறுமை வாயில் சிக்கி வாடும் நமது குடும்பத்திற்கு இச்சம்பவமும் ஓர் அறிவுறுத்தல் என்று எண்ண வேண்டும். தரித்திரமும், செல்வமும் நிலைபெற்றதன்று. தரித்திரம் 'தரித்திரோம்' 'தரித்திரோம்' என்றும், செல்வம் 'செல்வோம்' 'செல்வோம்' என்றுமியம்பி மனித சமூகத்திற்கு மாறி மாறிச் செயலாற்றி வருகிறது. ஆகவே தாங்கள் இன்னாள்வரை எந்த வேலையினால் சம்பளம் பெற்று வந்தீரோ அவ்வேலையும் செல்வோமென்று தங்களை விட்டு இன்று விலகிவிட்டது. இனி நம்மைப்பற்றியுள்ள தரித்திரமும் தரித்திரோம் என்று இன்னும் சின்னாட்களில் சென்றுவிடும். இதற்காக மனம் வருந்தி கண்ணீர் உகுத்துக் கலங்குவதால் யாது பயன்" எனக்கூறி எனது கண்ணீரைத் தனது மெல்லிய கரத்தால் துடைத்தனள்.

இச்சமயத்தில் ஓர் தந்தி பியூன் "அமிர்தகுணம் பிள்ளை நீர்தானா?" என்று கேட்டுக்கொண்டே வந்து என்னிடம் ஓர் தந்தியைக் கொடுத்தான். என் மனம் திகில் அடைந்தது. ஏன்? என்னுடைய இப்பஞ்ச கோலத்தில் என்ன துக்க சேதியோ என்பதுதான். உடனே உடைத்துப் படித்தேன். "ஐயா! தங்களுக்கு ஐந்து லட்சம் ரூபாய் அதிஷ்டப் பிரைஸ் கிடைத்திருக்கிறது. இத்தொகையைத் தங்களுக்கு நேரில் அனுப்பவேண்டுமா? அல்லது பாங்குகளில் செலுத்தி ரசீது பெற்றுத் தரவேண்டுமா? விபரமான பதில் உடனே தலைமை ஆபீசுக்குத் தெரிவிக்கவும்.

செக்ரடரி, எல். எப். பி. லாட்டரி பிரைஸ் ஆபீஸ்,
மெயின் ரோடு, லண்டன்.

என்றெழுதப்பட்டிருந்தது. இது உண்மைதானா? அல்லது பரிகசிப்பதற்காக விஷமிகள் யாரேனுமித் திருவிளையாடல்



செய்திருக்கக்கூடுமோ? எனப்பலவாறாக எண்ணி யோசிக்கலானேன். எனது அகமுடையாளும் தந்தியில் சொல்லப்பட்டிருந்த யாவும் உணர்ந்து வியந்து, 'இத்தந்தி மெய்தானா' என வினவினாள். சில நிமிடங்கள் பதுமைபோல் யோசனையில் ஆழ்ந்திருந்தேன். பின்பு திடீரென ஓர் நினைவு வந்தது. "யான் வேலைபார்த்துவந்த அர்பன் பாங்குக்கு சில மாதங்களுக்கு முன் லாட்டரி பிரைஸ் டிக்கட் விற்கும் ஏஜண்டொருவர் வந்து மானேஜரிடம் தாம் வந்த காரியத்தைக்கூறி சில டிக்கட்டுகள் எடுத்துக்கொள்ளும்படி கட்டாயப்படுத்தினார். அதற்கிணங்கி மானேஜரவர்கள் ஆங்குள்ள குமாஸ்தாக்களுக்கும், பியூன்களுக்கும் பிரைஸ் டிக்கட்டுகள் எழுதிக்கொடுத்தார். அவர் அதிகாரத்திற்கஞ்சி யானும் நான்கணா கொடுத்து என் டிக்கட்டை வாங்கிக்கொண்டு வீடு சேர்ந்தேன். நாளதுவரை அதன் எண்ணமே எனக்கில்லை. ஏதோ அதிஷ்டவசமாக நமது கஷ்டகாலத்தில் இப்பெருந்தொகை கிடைத்திருக்கிறதுபோலும்!" என்று என் மனையாளிடம் சொல்லிக்கொண்டே என் பிரைஸ் டிக்கட்டை எடுத்து தந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நம்பரையும், அதன் நம்பரையும் ஒப்பிட்டுப்பார்த்ததில் இரண்டும் சரியாயிருந்தன. பின்பு ஒருவாறு மனமகிழ்ச்சியடைந்து, பெருங்கஷ்டங்களிடையிலும் மனம் வருந்தாது இதமான மொழிகள் பகர்ந்து, இன்முகங்காட்டிக் குடும்பத்தை இனிதே நடாத்திவந்த எனது இன்ப மனையாளுக்குச் சந்தோஷ மொழிகள் பல இயம்பி, தந்தி ஆபீசுக்குச்செல்லத் தயாரானேன். "கையிலோ காசு இல்லை; பதில் தந்தி எவ்வாறு கொடுப்பது?" என்று என் மனையாட்டியுடன் கலந்தேன். எனதன்பின் களஞ்சியமாம் அருமந்த காதலி "நாதா! மயங்காதீர். யான் பல நாட்களாக நம்முடைய குறுகிய வருவாயிலிருந்து கொஞ்சம் பொருள் மீத்து வைத்திருக்கிறேன். அதை இச்சமயம் உபயோகியுங்கள்" என்று சொல்லி குடிசையினுள் நுழைந்து காலணாக்களும், பைசாக்களுமாய் நிரம்பிய செம்பு நாணயத்தில் பத்து ரூபாய் மதிப்புள்ள ஓர் முடிப்பை என்னிடம் கொண்டு வந்து கொடுத்தாள். யானும் சந்தோஷத்தோடு பெற்றுக்கொண்டு தந்தி ஆபீசுக்குச் சென்றேன். அங்கு எனக்குக் கிடைத்துள்ள தொகையில் மதராஸ் இந்தியன் இம்பீரியல் பாங்கில் 4 லட்சம் ரூபாய் நீடித்தகால டிபாசிட்டிலும்,

50-ஆயிரம் ரூபாயை தேவையான போதெல்லாம் எடுத்துக் கொள்வதாகவும், மதுரை 750-ம் நிர். அர்பன் பாங்கில் 25 ஆயிரம் ரூபாயை நீடித்தகால டிபாசிட்டிலும், கோயம்புத்தூர் இந்தியா லைப் பெனிபிட் அஷ்யூரன்ஸ் சொஸைடியில் 25 ஆயிரம் ரூபாயை பங்குத்தொகையாகவும் கட்டி, எனக்கு ரசீதுகளை உடனே அனுப்பிவைப்பீர்களாகவும்" என்று ஒரு தந்தியைக்கொடுத்து வீட்டுக்குத் திரும்பினேன்.

பதினைந்து தினங்களில் யான் கோறியபடி சகல ரசீதுகளோடு 50 ஆயிரம்ரூபாய்க்கு காண்ட் செக்குகளும் கிடைத்தன. இதற்குள் இச்சங்கதி தினசரிப் பத்திரிகைகள் மூலம் நகரெங்கும் பரவவே பல பெரியோர்களும் சிறியோர்களும் எனது சிறு குடிசைக்கு வந்து திரும்பியவண்ணமாகவே இருந்தனர்.

நாட்கள் சில சென்றன. பெரும் லட்சாதிபதியாகிய நான் இன்னும் எனது வாழ்க்கையை ஓர் சிறிய குடிசையில் நடாத்திவர சம்மதமில்லாததால் நகர பரிபாலன சபையாரிடமிருந்து ஓர் விசாலமான காலி இடத்தைப்பெற்று, கவர்ன்மெண்ட் இன்ஜினீயர்களின் மேற்பார்வையின் கீழ் பல அடுக்குகளுடன் கூடிய உன்னதமான ஓர் அரண்மனையும், என்னைக் காண்பதற்காக வரும் பிரமுகர்களுக்கு பேட்டி கொடுத்து சம்பாஷிப்பதற்கு மேனாட்டினரும் வியக்கத்தக்கதான நந்தவனங்களால் சூழப்பட்ட பங்களா ஒன்றும் கட்டி முடித்து, எனது குடும்பத்தை சிறு குடிசையினின்றும் மாடி வீட்டிற்கு மாற்றிக்கொண்டேன்.

இந்நிலையில் "காலாடு போழ்தில் களிகிளைஞர் பலரும் வாளாடு மீனிற் பலராவர் ... ... ..." என்ற பெரியோர் மொழிக்கிணங்க என்னைச் சூழ்ந்து கொண்டாடும் குழாம் தினே தினே அதிகரித்தவண்ணமாக இருந்தன.

இச்சமயத்தில் எனது வீட்டில் சமாராதனைத் திருநாளோ எனக்காண்போர் நினைக்கும் வண்ணம் யாவருக்கும் போஜனம் வழங்கப்பட்டது. மூலை முடக்கு, சந்து பொந்துகளிலுள்ள பலரும் வந்து "நான் தங்கள் தம்பி மகன், மகனுடைய மகன், அத்தை பேரன், தங்கள் பாட்டனாரின் வம்சத்தைச்சார்ந்தவன்" எனப்பலவாறு உறவின்முறை கொண்டாடி மூக்களவு மூன்று வேளையும் உண்டுகளிக்க வந்து



திரம்பினர். யானும்இவைஅனைத்தும்பொருட்படுத்தாது விதவிதமான ஆடைகள் தரித்து, உல்லாசமாகக் காரில் அமர்ந்து பல பெரியோர்களின் இல்லங்களுக்கும், பந்து விளையாட்டுகளுக்கும் சென்று இன்பமாகக் காலங்கழித்தேன். இதற்குள் எனக்கு வரும் கடிதங்கள் யாவும் "லட்சாதிபதி கனம் அமிர்தகுணம் பிள்ளை அவர்கள் திவ்ய சமுகத்திற்கு" என மேல்விலாசத்துடன் வருவதிலிருந்து எனக்கும் சிறு மமதை மனதில் வேரூன்றியது. அடுத்தாற்போல் யான் இருந்த ஜில்லாவில் ஜில்லாபோர்டு தேர்தல் கிளம்பலாயிற்று. இச்சமயம் நாமும் ஓர் தொகுதிக்கு அபேக்ஷகராக நிற்போமா என என் மனம் தூண்டிற்றென்றாலும் அதில் உறுதி பெறாது மனம் மாற்றமேற்பட்டது. அவ்வமயம் சிலர் என்னிடம் வந்து "வரப்போகும் ஜில்லாபோர்டு தேர்தலில் தாங்கள் ஓர் அபேட்சகராக நிற்கக்கூடாதா? தங்களுக்கு அவ்வளவு யோக்கிதாம்சமும், பொருப்புமில்லையா? என்ன? நாங்களும் தங்களுக்கு வேண்டிய உதவி புரிகிறோம்; தாங்கள் இசைந்தால் போதும்" என்ற இதோபதேசங்களை அடிக்கிக்கொண்டேபோனார்கள். நானும்சம்மதித்துநாமினேஷன் பேப்பர் கொடுத்து வீடுதிரும்பினேன். நற்காலபயனால் நான் போட்டி இன்றித் தேர்ந்தெடுக்கப்பட்டேன். பின்னர் பல பிரமுகர்களின் தூண்டுதலின்பேரில் எனது மனமும் போர்டு பிரசிடெண்டு பதவி பெறலாமென்று அவாவியது. "வருஞ்செல்வம் வழியிலும் தங்காது" என்றபடி யான் ஜில்லாபோர்டு தலைவர் பதவிக்கு நிற்கிறேனென்ற செய்தி தெரிந்த இதர அங்கத்தினர்களும், நிறந்தரமாக சென்ற சில தேர்தல்களில் முறையே தலைமை ஸ்தானம் வகித்து வந்தவரும், பெருஞ்செல்வம் படைத்த என்னுடன் போட்டிபோட இயலாது என்பதை உணர்ந்து, பதுமைபோல் அடங்கிக்கொண்டார்கள். இந்த எதிர்பாராத பதவியை அடைந்த சந்தோஷப்பெருக்கால் எனது பங்களாவில் கலெக்டரவர்கள் தலைமையின்கீழ் தோட்ட விருந்தொன்று நடாத்திவைத்து, அன்றுமுதல் ஜில்லாபோர்டின் அலுவல்களை நேரிய முறையில் கவனித்துக்கொண்டு வருவதற்கு (முன்பு என் பள்ளிப்பருவத்தில் நான்காவது வகுப்பு அரையைவிட்டு மூன்றுவருடங்கள் மேல்வகுப்புக்குச் செல்லாது கல்வியில் கரணமடித்த கலிகால பிரகஸ்பதியாய் இருந்தே

னெனினும் தற்கால ஆட்சி முறைக்காக) நல்ல ஆசிரியர்களைக்கொண்டு ஆங்கிலமும், தமிழும் பிழையின்றி எழுதப் படிக்கத் தெரிந்துகொண்டேன்.

இவ்வண்ணமாக ஆண்டுகளிரண்டு நிறம்பின. ஸர், பகதூர் பட்டங்கள் ஒன்றின்மேல் ஒன்று எமக்கு வலிய வந்துகுவிந்தன. இவ்வளவு வைபவத்தில் நுழைந்து ஊசலாடும் எமது உள்ளத்தின் ஓர் புறத்தில் அதிகார வெறி, ஆணவம், ஆசை ஆகிய சுயநலப்பற்றுகள் ஒட்டி உராய்ந்தன.

ஓர் நாள் மாலை 4-மணிக்கு எனது இன்ப மனையாளுடன் மேல்மாடியில் உல்லாசமாக வார்த்தையாடிக்கொண்டிருக்கும் போது சமையலறையின் கீழ் தளத்தின் ஓரமாகப் பெருத்த சத்தம் கேட்டது. உடனே எனது காதலியும் யானும் கீழிறங்கி வர கீழ்க்கண்ட விஷயங்கள் வெளியாயின. எனது வீட்டில் மூன்றுவேளையும் மூக்களவு உண்டுகளிக்கும் முத்தண்ணுவிகளுக்காக சமைக்கப்படும் சாதத்திலிருந்து வழிந்தோடும் கஞ்சி தேங்கி நிற்பதற்காக வெளியில் ஓர் பள்ளம் வெட்டி வைத்திருந்தேன். அதில் 5-அடி அளவு தேங்கி நிற்கும் சோற்றுக் கஞ்சியைக் குடிப்பதற்காக அங்கு வந்து கூடிய ஆண்களும் பெண்களும் அடங்கிய ஏழை மக்களிடையே எனக்குனக் கெனக் கஞ்சிக்காக வைத்துக்கொண்ட சச்சரவு என்பதாக உணர்ந்தேன். அப்போது எனதினிய மரகதம் "நாதா! நம்போன்ற பிரபுஸ்தானமுடையவர்கள் நன்றாய் உண்டு, உடுத்து, உல்லாசமாய் வருத்தமின்னதென் பதறியாது மாடிகளில் தங்கி காலங் கடத்துகிறார்கள். முகஸ்துதிபேசி மூச்சுத்திணர உண்டு களிப்பவர்களும் நம்மைச்சுற்றி சுகப்படுகிறார்கள். இவ்வேழை மக்களின் பரிதாபநிலைமையைப் பார்த்தீர்களா? இக்கூட்டத்தில் எத்தனை சிசுக்கள், எத்தனை வயோதிகர்கள் நரம்பும் தோலுமாகத் தள்ளாடுகிறார்கள். நமது நாட்டில் இவ்வளவு பரம ஏழைகளும் இருக்கிறார்களன்றோ? இவர்களின் வாழ்க்கையைச்சிந்தித்துப்பார்ப்பவர்கள் கிடையாதா? ஐயோ பரிதாபம்! பரிதாபம்!!" என மனவருத்தத்தோடு மொழிந்தாள். இவைகளைக் கேட்டுக்கொண்டிருந்த யானும் நெஞ்சமுருகி அன்று முதல் எனது ஆளுகைக்குள் (ஜில்லாவுக்குள்) வசித்துவரும் எல்லா ஏழை மக்களையும் வருவித்து அவரவர்கள் நிலைமைக்


1899-25

குத்தக்கபடி தொழில் செய்து ஜீவனம் செய்வதற்கான பொருளுதவி செய்தேன். அப்போதைக்கப்போது அவரவர்களின் முயற்சி குறையாது தொழில் நடத்தி முன்னேறுவதற்கான முறைபற்றி மேற்பார்வை உத்தியோகஸ்தர்களையும் நியமித்து வைத்தேன்.

இவ்வேலையிலிறங்கிய பிறகு எம்மைப்போற்றிப் புகழாத மக்களே இல்லை எனலாம். எங்குபார்த்தாலும் எம்மைப்பற்றிய பேச்சாகவே இருந்தது. என்னுடைய பெயரும், அதிகாரமும், கொடை வன்மையும், சீர்திருத்த நோக்கமும் சித்தரித்து வெளிவராத பத்திரிகைகளே பார்ப்பதரிது. இவ்வபார கீர்த்தியில் சிக்கி மயங்கும் எனக்கு மற்றொரு அதிர்ஷ்டமும் வலிய வந்தது. அது யாதெனில் ஏழைகளின் பிரதிநிதி என்ற ஹோதாவில் ஓர் சட்டசபை அங்கத்தினராக ( M.L.C. ) அமர்ந்து அருந்தொண்டாற்றி ஏழை மக்களின் கஷ்டங்களை கூடியமட்டும் நாட்டினின்று விரட்டி அடித்ததேயாகும். இவ்வரும் பணியில் இரண்டு வருடங்கள் மும்முரமாக வேலை செய்துகொண்டிருக்கும் போது எனது கனிஷ்ட குமாரன் கனகாம்பரனுக்குக் கல்யாண வயது வந்தது. இச்சுபகாரிய நிமித்தமாக ஓர் நன்னாளில் நடுநிசியில் என் காதலியோடு கலந்தாலோசித்தேன். "நமது செல்வப்பிள்ளை மிக்க அறிவும், ஆற்றலும் உடையவன்; அதற்கேற்ற பூஸ்திதியும், புத்துணர்ச்சியு மொருங்கேகொண்டுள்ளான். இவனுடைய வாழ்க்கை இன்பமாக நடந்தேறுவதற்கு ஓர் நற்குடியில் பிறந்த நல்லணங்கை தேர்ந்தெடுத்து மணஞ்செய்து வைப்பதுதான் நன்மையாகும். ஐக்கோர்ட் ஜட்ஜ்..........அவர்களின் கனிஷ்ட புத்திரியை மருகியாக ஏற்றுக்கொள்ளும்படி தினந்தோறும் நமக்கு தூது வந்தவண்ணமாக இருக்கிறது. தங்கள் அபிப்பிராயத்திற்கு எப்படிப் பொருத்தம்......" என்றாள் என் மனைவி மரகதம். ஜட்ஜ் வீட்டார் தடையின்றி எமது குமாரனுக்குப் பெண்கொடுக்க ஆசைகொண்டுள்ளார் என்ற சேதி தெரிந்த எனக்கு "பொன்னொடு மணியுண்டானால் புலைஞருங் கிளைஞரென்று, தன்னையே புகழ்ந்துகொண்டுசாதியில் மணமுடிசெய்வார்......" என்ற செய்யுட்பா சிந்தையிலுதித்தது. யான் முன்பு எனது சிறிய குடிசையில் நடத்திவந்த வாழ்க்கையையும், தற்போது ஜட்ஜ் அவர்களின் சம்பந்தியாக

சண்டையிட்டு இழுக்கும் தற்கால யோகத்தையும் எண்ண எண்ண, ஆனந்த பரவசம் என்னை ஆட்டிக் குலுக்கின. அவ்வானந்தப் பெருக்கால் அருகிலிருந்த எமது அருமை மரகதத்தை அணைத்து மயக்கநிலையில் மதியனைய முகத்தில் மாறி மாறி முத்தமாரி சொரிந்துகொண்டிருந்தேன். அப்போது யாதோ என்முதுகில் விழுந்ததுபோல் சப்தம் கேட்டது. திடீரென கண்விழித்தெழுந்து நாலா பக்கமும் பார்த்தேன். கிழிந்த ஓலைப்பாயின்மேல் என் சிறு குடிசையினுள் யான் படுத்திருப்பதையும் எனதருகில் எனது சிறு குழந்தைகளிரண்டும் அப்பா! அப்பா!! என்று தமது கைகளால் என் முதுகில் அடித்துக்கொண்டிருப்பதையும் "மணி 7-ஆகியும் இன்னும் படுத்துக்கொண்டா இருக்கிறீர்கள்?" என்று சொல்லிக்கொண்டே என்பக்கம் வருவதையுங் கண்ட யான் "என் வறுமை வாழ்க்கையிலும் இத்தகைய புனித சுகானுபவத்தை நித்திரை நேரத்திலாவது கொடுத்தருளிய எல்லாம் வல்ல இறைவனின் திருவருட் சக்தியை வியந்து மனமகிழ்ச்சியோடு என் காலைக்கடனை முடித்துக்கொண்டு வழக்கமாகப் போகும் எனது வேலைக்குப் புறப்படத் தயாரானேன்.

---


"சுசீலா"

சுகந்த வாசனைத் தைலம்.

நூதனமுறைப்படி தயாரிக்கப்பட்டது. இது கூந்தலை கருமையாக வளரச்செய்யும். ரோமம் உதிர்தல், தலையில் உண்டாகும் பொடுகு முதலியவைகளை நீக்கும்.

புட்டி 1-க்கு விலை அணா 10.

கிடைக்குமிடங்கள்:-

உடுமலை K. S. ராமனாத அய்யர், ஹோட்டல், பழனி.

பீம விலாஸ், அடிவாரம், பழனி.


# தெலுங்குமொழிப்புலவர் பெருமக்கள்.

(கோவை, திரு சி. கு. நாராயணசாமி முதலியார்)

---

ஆந்திரம் எனப்படும் தெலுங்குமொழி நூல்களில் நமக்கு அம்மொழி வல்ல புலவர் பெருமக்கள் வரலாறுகள் காணப்படுவதுபோல், பிறமொழி நூல்களில் பிரபஞ்சத்தில் பிரசித்திபெற்றகவியரசர்கள் வரலாறுகள் காணப்படுவதில்லை. ஆந்திர அரசர்களும், பிறபிரபுக்களும் தெலுங்குமொழியில் மிக்குயர்ந்து புலமைக்கு அரசர்களாக விளங்கிய கவிவாணர்களையும், அவர்களியற்றிய அரும் பெரும் நூல்களையும் அன்புடன் வரவேற்று, ஆதரணை காட்டிப்பெரும்பொருளுதவிப் பெரிதும் உற்சாகமூட்டிப் பேணிவந்தார்கள். இவற்றால் அம்மொழி வளர்ச்சி பெற்று, ஆந்திர நாடனைத்திலும் புலவர்கள் பெருக்கமடைந்து, பெயர் சிறந்து விளங்குதற்காயினர். இங்ஙனம் பெருக்கமடைந்த புலவர்களுள், முதன்மையாக வைத்தெண்ணக்கூடிய தகுதியும், புலமை ஆற்றலும்வாய்ந்த புலவர்பெருமக்கள் சிலர் விளங்கிப் பெயர்சிறந்திருந்தனர். அவர்கள் பெயர்கள்:— வால்மீக முனிவரது வடமொழி இராமாயணத்தைத் தெலுங்குமொழியில் இயற்றிய 'பாஸ்கரன்', வடமொழி வியாச பாரதத்தை ஆந்திர பாஷையில் செய்த "திக்கன்ன சோமயாஜி", சம்ஸ்கிருத மார்க்கண்டேய புராணத்தை தெலுங்கில் பாடிய "மாரன்னகவி", பிரதாபருத்ரீயம் என்னும் அலங்கார சாஸ்திரத்தை உலகம் உள்ளளவும் நிலைபெறும்படி பாடியருளிய "வித்யாநாதன்", நீதிசாரம் நிரம்பியவேமன்னபத்தியத்தைஇயற்றிய "வேமன்னகவி", "பத்தென்னகவி", "விடலராசன்", "கோணபுத்தாரெட்டி", "திம்மராசு" முதலியவர்களாம்.

இவ்வருங்கவிவாணர்கள் அரசர்களாலும், அறிவுடையவர்களாலும் பெரிதும் மதிக்கப்பெற்று, பொன்னாபரணங்களும், பீதாம்பரம், வெண்பட்டு முதலிய ஆடைகளும், கனகாபிஷேகமும்சன்மானமாகப்பெற்றவர்களென்பது வரலாறுகளால் அறியப்படுகின்றது. இங்ஙனம் மதிப்பும், வெகுமதி

களும் பெறக்கூடிய தகுதிவாய்ந்த கவிவாணர்களது இனிய கவிகளையும், அவர்கள் இயற்றிய பிரபந்தங்களையும் ஓதி அவைகளின் குணதோஷங்களை ஆராய்ந்தறியக்கூடிய திறமைகளை ஆந்திரப் பிரபுக்களும், பேரரசர்களும், சிற்றரசர்களும் மிகுதியாகப் பெற்றிருந்தார்கள். இவற்றால் அரசர்களும் புலவர்களைப்போலவே இலக்கிய இலக்கணங்களைச் சந்தேக விபரீதமறக்கற்றுக் கவிபாடும் வன்மையையும், பிரபந்தங்களும், காவியங்களும் இயற்றும் சக்திகளையும் கொண்டிருந்தார்களென்று புலனாகின்றது. இவ்வாறு புலவர்களும், பிரபுக்களும், அரசர்களும் ஆந்திர மொழிவளர்ச்சியில் கண்ணுங் கருத்தும் கொண்டிருந்ததனாலேயே, அம்மொழி மிகவும் முன்னேற்றமடைந்து, ஆந்திர நாடனைத்தும் பரவி, வியாபகம் பெற்றுக் கீர்த்தி சிறந்து விளங்கியது. ஆந்திரப்பேரரசர்கள் புலமை சிறந்துவிளங்கினார்களென்பதற்கு விஜயநகர வேந்தனாகிய 'ஸ்ரீ கிருஷ்ணதேவராயனும்' நிஜாம் இராஜ்ஜியத்திலுள்ள ஓரங்கல் (வாரங்கல்) 'இரண்டாம் பிரபுட தேவராயனும்' ஆகிய இவர்கள் பாடிய 'ஆமுக்த மாலியம்', 'பிரதாபருத்தரீயம்' என்ற இரு நூல்களும் சிறந்த சான்றுகளாம். மேலும் ஆந்திர நாட்டரசர்களும், பிரபுக்களும் தெலுங்கு மொழிவாணர்களை மிகுதியாக ஆதரித்ததோடு, அவர்கள் இயற்றிய பிரபந்தங்களுக்குப் பாட்டுடைத் தலைவர்களாகவுமிருந்து மொழிவளர்ச்சிக்குப் பெரிதும் உபகாரிகளாகவும் இருந்தார்கள். இவ்வுபகாரத்தன்மையினாலும், ஆதரணைகளினாலும் ஆந்திரமொழிப்புலவர்கள்பெயர்சிறந்து தங்கள் கீர்த்தியை நிலைநாட்டினார்கள். அவர்களுள் சில புலவர்களது வரலாறுகளை இதன் கீழ் சுருக்கமாகத் தருகின்றோம். அன்பர்கள் அறிந்து இன்புறுவார்களாக.

## I. நன்னயசோழகவி.

தெலுங்குமொழிப் புலமை வல்லார்களில் முதன்மையாகவைத்தெண்ணக்கூடியவர் 'நன்னய சோழகவி' என்னும் பெரியாராவர். இவர் வடமொழியில் வல்லார் எனப்பெயர் சிறந்ததோடு, ஆந்திர பாஷையிலும் அபார புலமை பெற்று பெரும் புலவராக விளங்கினர். இக்கவியரசு சோழநாட்டுத் திரிசிரபுரத்து உறையூரை இராஜமா நகரமாகக்கொண்டு, கோதாவரி நதிக்கரைப் பிரதேசங்களையும், சிங்கள மத்திய பூமி முதலிய நாடுகளையும் அரசுபுரிந்துவந்த சோழ அரசர்களின் வமிசத்தைச்சார்ந்த பிரசித்தராவர். இப்புலவரது



தந்தை 'சோழவல்லிபாகநாடு' என்ற ஊருக்குத் தலைவராக விளங்கியிருந்தனர். நன்னய கவி வாழ்ந்திருந்தகாலம் கி. பி. 650-ம் நூற்றாண்டென்று ஸ்ரீ மானவல்லி இராமகிருஷ்ண கவி அவர்கள் கூறுகின்றனர். ஆந்திரப்புலவர்கள் வரலாறு எழுதிய 'ஸ்ரீ வீரேசலிங்கம் பந்துலு' அவர்கள் கவியினுடைய காலம் கி. பி. 1153-ம் ஆண்டென்று தமது நூலில் விளக்கி இருக்கின்றனர். நன்னய கவியின் கால நிர்ணயம்பற்றி மானவல்லி இராமகிருஷ்ண கவிக்கும், ஸ்ரீ வீரேசலிங்கம் பந்துலு அவர்கட்கும் பத்திரிகைகளில் வாதப் பிரதிவாதம் நிகழ்ந்ததாக அறியப்படுகிறது. இந்நன்னய சோழகவி, ஆந்திரக் கவியுலகில் அக்கிரகண்ணியராகவும், கவிச் சிரேஷ்டர்களில் முதல் வரிசையில் வைத்தெண்ணக் கூடிய பெருமை உடையவராகவும் பெயர் சிறந்திருந்தனர். இவருக்குச் சைவத்தில் மிகவும் பற்றும், சிவபெருமானிடத்தில் பெருகிய பக்தியும், பேரன்பும் மிகுதியாக இருந்தன. இவ்வுண்மை இவர் இயற்றிய 'குமார சம்பவம்' என்ற நூலால் விளக்கமாம். இவ்வரிய நூல் பிறமொழிகளில்விசேடமாகமதிக்கப்பட்டுவருகின்ற உயரிய காவியங்கட்கு எவ்வகையிலும் தாழ்ந்ததல்ல. குமார சம்பவ காவியத்தின் உயர்வைப்பற்றி, தேருமல்லி, இராஜகோபால் ராவ் அவர்கள் சென்னைகிறிஸ்தவ கலாசாலை மாதப்பத்திரிகையில் சிறப்பாக எழுதி இருக்கின்றனர்.

இயற்கையையும், அதன் பேரழகையும் உண்மையாகவே மதித்துத் திறமையாக வருணிக்கும் பேராற்றலுடைய ஆங்கிலக்கவி 'வோர்டுஸ்வர்த்தை'ப்போலவே ஆந்திர மொழியில் மிகவும் தேர்ந்து, பெரும்புலவராகப் பெயர்சிறந்த நன்னய சோழகவியும், ஆந்திர மொழியில் பிரகிருதியை நன்றாகவும், அழகாகவும் வருணித்து, அதன் ஒப்பற்ற சௌந்தரியத்தை வியந்து அற்புதமான கற்பனைகளால் கவிபுனைந்து பாடி இருக்கின்றனர். அவரது புலமையையும், புத்தமுதனைய கவிகளையும் புலமையறிவுடையார் யாவரும் சுவைத்து இது அற்புத விவேக சம்பத்துடையது; சுவையமுதம் நிரம்பியது என்று மனமாறப்போற்றிப் புகழ்ந்துகூறி இருக்கின்றனர். இதனால் நன்னய சோழகவியினுடைய பேரறிவும், பெரும்புலமையும் எத்துணை உயர்வுடையதென்று விளக்கமாகின்றது. உதாரணத்திற்கு நன்னய சோழகவி இயற்றிய குமாரசம்பவத்திலிருந்து சில பகுதிகள் அடுத்த இதழில் வெளிவரும்.

(தொடரும்.)

# மாதர் பகுதி.

## கர்ப்பத்தடை.

தோழர், A. B. ஆதித்தர்.

காலநிலைமையையும், தேசநலத்தையும் கருதி சில நாடுகளில் ஜனன விகிதத்தை அதிகப்படுத்தவும், சில நாடுகளில் பிரஜாவுற்பத்தியைக் கட்டுப்படுத்தவும் பலத்த முயற்சிகள் நடைபெறுகின்றன. பொருளாதார நிலைமையையும், சமூகப் பொறுப்பையும், வைத்திய முறையையும் கருதி நம் தேசத்திலும் பிரஜாவுற்பத்தியைக் கட்டுப்படுத்தவேண்டியது மிகவும் அவசியமாகும்.

கருவுற்பத்தியைக் கட்டுப்படுத்துவதால் ஒழுக்கம் கெட்டுவிடுமென்று இதனை ஆட்சேபிப்பவர்கள் கூறுகின்றனர். வாழ்க்கையின் ஒவ்வொரு விஷயத்தையும் நாம் நல்ல காரியங்களுக்கும் பயன்படுத்தலாம்; கெட்ட காரியங்களுக்கும் உபயோகிக்கலாம். ஒரு சிலர் கெட்ட காரியங்கள்செய்ய ஹேது இருக்கிறதென்கிற காரணத்துக்காக நல்லது செய்யக்கூடிய முறையை நாம் தள்ளக்கூடாது. கருவுற்பத்தியைத் தடைசெய்வதால் ஒழுக்கஹீனம் அதிகரிக்குமென்றே வைத்துக்கொண்டாலும், பெற்றோர்கள் வேண்டாததும் சமூகம் காப்பாற்ற முடியாததுமான குழந்தைகளைப் பெறுவதால் இன்னும் பெருத்த கேடு விளையாதா? சாதாரணமாக ஜீவாதார உரிமைகள்கூடக் கிடைக்காமலும், ஆரம்பக் கல்வி வசதிகள் கிடைக்காமலுமிருக்குந் தறுவாயில் ஜனனவிகிதத்தை அதிகரிப்பது துன்மார்க்கமாகும். ஒரு ஸ்திரீயின் விருப்பத்துக்கு மாறாகப் பிரசவக் கஷ்டங்களையும், ஆபத்தையும் அநுபவிக்கும்படியாக அவளைக் கட்டாயப்படுத்துவது கொடியதோர் செயலாகும்.

கருத்தடையால் பெண்களின் ஆரோக்கியம் கெடும் என்று சிலர் செப்புகின்றனர். அடிக்கடி கருத்தரிப்பதைவிட அது அதிகக்கேடாகாது. இந்தியாவில் ஒரு வருஷத்திற்குள் மரணமாகும் குழந்தைகளின் தொகை அதிகமாகி இருப்பதற்கு ஸ்திரீகள் அடிக்கடி கர்ப்பந்தரித்து வலுவிழந்து ஆரோக்யமான குழந்தை பெறும் சக்தியை இழந்துவிடுவதே காரணமாகும். பல பெண்களுடையவும், குழந்தைகளுடையவும் மரணத்துக்கு நாம் ஜவாப்தாரியாகாமல் கர்ப்பத்தடைக் கட்டுப்பாட்டை ஆதரிக்கக் கடமைப்பட்டு இருக்கிறோம்.

டாக்டர் மத்யூ என்னும் பிரபல வைத்தியர் தம் ஆராய்ச்சியினால் உலகத்தில் பிறக்கும் ஒவ்வொரு ஸ்திரீயும் தம்மாயுள் காலத்தில் 15-குழந்தைகளைப் பெறக்கூடியவர்கள் என்று கூறுகிறார். அதாவது எந்த ஸ்திரீ புருஷர்களும் (தம்பதிகள்) சரியாகவிருந்தால் அவர்களிருவரும் தங்கள் வாழ்வில் 15-குழந்தைகளைப் பெறக்கூடும். இவ்விதம் ஒவ்வொரு தலைமுறையிலும் சரியான தொகை ஜனனமேற்பட்டால் நாட்டில் ஜனத்தொகை ஏராளமாக அதிகரித்து, அத்தனை பேர்களும் ஜீவிக்கப் போதிய ஆகாரம் கிடைக்காமல் அவஸ்தைப்பட நேரும். சீனாவில் ஆகாரம் குறைந்து ஜனங்களதிகரித்து குழந்தைகள் ஆற்றிலும், ஓடையிலும் எறியப்படுவதாகவும் சில சமயம் கேள்விப்படுகிறோம். உலகின் இதரபாகங்களிலும் அவ்வித ஸ்திதி ஏற்படு முன்னர் கவனமாகக் கர்ப்பத்தடையைச் செய்து அளவிற்கதிகம் குழந்தைகள் பிறக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும். இலதேல் நாட்டில் பஞ்சம், பிணி, வறுமை ஏற்பட்டு, யுத்தமுண்டாகிப் பலர் மடியநேரும். இவ்விதம் நேராமல் பகுத்தறிவுள்ள மனிதன் தனது பிரயத்தனத்தினாலேயே உணவுப் பொருள்களுக்குத்தக்க ஜனத்தொகையைக் குறைக்கக்கடமைப்பட்டுள்ளான். அதுதான் கர்ப்பத்தடை—கருத்தரிக்காமல் கவனித்துக்கொள்ளுமுறை.

இந்த அபிப்பிராயம் உலகின் பலதேச நிபுணர்களால் ஆதரிக்கப்பட்டு வருகிறது. டாக்டர் எட்டி இதனை எச்சமயமும், எல்லா நாட்டிலும் வற்புறுத்தி வருகிறார். "ஐரோப்பாவில் ஹாலண்டு என்றொரு தேசமிருக்கிறது. அங்கு 40 வருஷங்களுக்கு முன்னால் சகலரும் கர்ப்பத்தடைமுறையை அநுஷ்டித்தார்கள். அதன் பலன் என்ன? இப்பொழுது அவ்வூரில் விபசாரமோ வறுமையோ கிடையாது. ஜனத்தொகை உணவுப் பொருளுக்குப் போதியதாயிருக்கிறது.

பிரான்ஸைப்போல் அந்நாட்டில் ஜனத்தொகை ஏறாமலும் இறங்காமலும் ஒரேமாதிரியாகவுமில்லை. சிறுகச்சிறுக எவ்வளவு அவசியமோ அவ்வளவுதான் நிதானமாக ஜனத்தொகை உயர்ந்துவருகிறது. அதற்கடுத்த தேசமாகிய பெல்ஜியத்தில் கர்ப்பத்தடையில்லை. அங்கு விபசாரமும், அநாதைக் குழந்தைகளும் அதிகமாயிருக்கின்றன" என்று டாக்டர் எட்டி எடுத்துக்காட்டுகிறார்.

சகல ஜீவன்களும் பூமியில் விளையும் பொருள்களையே நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. ஒரு ஆளுக்குக் குறைந்தது இரண்டு ஏக்கர் நிலம் தேவையாயிருக்கிறது. இதைக் கவனித்து அளவிற்கதிகம் கருத்தரிக்காமல் வாழ்க்கையை கவனித்துக் கொள்ளவேண்டிய பொறுப்பு மனிதர்களைச் சேர்ந்தது. ஆண்மக்கள் இவ்விஷயத்தில் கவனம் செலுத்தக்கடமைப்பட்டவர்களாயினும் பெண்மக்களும் இதை முக்கியமாகக் கருதி விசேட முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். ஸ்திரீகள் ஆண்மக்கள் கையிலகப்பட்டு இவ்வளவு காலம் அவஸ்தைப்பட்டு வந்திருக்கிறார்கள். இனிமேலாயினும் அந்த அவஸ்தைக் கிடங்கொடுக்காமல் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். தன்னால் சம்ரக்ஷிக்கமுடியாத வகையில் ஏராளமாகக் குழந்தைகளைப் பெற்றுவிட்டால், குழந்தைகள் சுகம் குறைவதுடன், தாயின் உடம்பும் சீர்குலைந்து குடும்ப வாழ்க்கையின்பத்தை அநுபவிக்க முடியாதவளாகிறாள். வருஷா வருஷம் குழந்தைபெற இடம்கொடுக்காத வழியில் கர்ப்பத்தடைமுறைகளை அநுஷ்டிக்கவேண்டும். வைத்திய சௌகர்யத்தையும், உணவுப்பொருள் வசதியையும் யோசித்துக் கர்ப்பத்தடைமுறை யவசியமென்பதைத் தெரியவேண்டும். வறுமை அதிகரித்தால் வாழ்க்கை நிலைதாழ்வுறும். இதனால் சுகம் குறையும். ஒவ்வொரு குடும்பத்திலும் அதிகக்குழந்தைகள் பிறக்காமல் கவனித்துக் கொள்வதால் சந்ததிகள் நல்ல புத்திசாலிகளாக விருப்பார்கள். குருடு, செவிடு, பைத்தியம், ஊமை, திருடு, மக்குக் குழந்தைகள் சமூகத்தில் அதிகரிப்பதற்குக் கணக்கற்ற பிரசவமேற்படுவதே காரணமாகும். புத்திசாலிகள் வம்சத்தில் குழந்தைகள் பிறப்பு குறைவதும், மூளையை உபயோகிக்காமல் சரீரத்தால் மாத்திரம் உழைப்பவர்களுக்குக் கணக்கற்ற குழந்தைகள் பிறப்பதும் இயல்பாயிருப்பதும் கவனிக்கத்தக்கது.



கர்ப்பத்தடையைவிட தன்னடக்கம் சிறந்த மார்க்கமாகும். ஆனால் அது எல்லாருக்கும் சாத்யப்படக்கூடிய காரியமல்ல. கணவனும் மனைவியும் ஏககாலத்தில் தன்னடக்கத்துடனிருக்க வேண்டுமென்று எவ்விதம் எதிர்பார்க்க முடியும்? கணவனும் மனைவியும் சேர்ந்து வாழும் குடும்பத்தில் இருவரில் ஒருவர் சிற்றின்ப இச்சைக்குட்பட்டு மற்றவரை நெருங்குகையில் மறுத்து விலக்கியிருப்பது கூடாத காரியம். சம்போகத்திற்கிடம் கொடாமலே யிருப்பதால் குடும்பத்தில் சச்சரவேற்படும். மனஸ்தாபம், சந்தேகம் தோன்றிவிடும். தேகதிடம் குறைந்துவிடும். இத்தகைய அதிருப்திக்கிடங்கொடுத்துக் குடும்ப ஒற்றுமையைப் பாழ்படுத்தவும் கூடாது. கணவன் மனைவி ஒருவருக்கொருவர் தடைகளையேற்படுத்துவதால் அவர்களுள் மனோவேற்றுமை ஏற்பட்டுவிடுமென்று மனோதத்துவ சாஸ்திரிகளும் எச்சரித்து இருக்கின்றனர்.

ஆனால், கணவன் விருப்பத்திற்கிணங்க விருப்பமில்லாவிட்டால் மனைவி அதை அவனிடம்வெளியிட்டுச்சொல்லிவிடவேண்டும். மனைவி குழந்தைகளைப் பெறுவதினால் நோயாளியாகிவிட்டால், அப்பாலும் அவள் கர்ப்பந்தரிக்கும் வழியில் சம்போகம் செய்யக்கூடாது. தன்னால் கர்ப்பத்தை தாங்கச் சக்தியில்லையென்ற காரணத்தால் ஒரு மனைவி கணவனை அணுகவிடாவிட்டால் கணவன் கெட்டவழியில் போகநேர்ந்தாலும் நேரலாம். இத்தகைய சந்தர்ப்பங்களில் தான் கணவனும் மனைவியும் தன்னடக்கம்காட்டவேண்டும்.

சம்போக விஷயம் ஆண் பெண்களுக்கியல்பு. இதைப் பற்றியோ, கர்ப்பத் தடையைப் பற்றியோ எல்லோரும் தெரிந்து வைத்திருக்கவேண்டும். இதில் இரகஸ்யமோ, வெட்கமோ தேவையில்லை. புத்திசாலித்தனமாக நடந்துகொண்டு கருத்தரிக்க இடம் கொடாமலிருக்க வேண்டும். கலிபோர்னியாவில் இவ்விஷயமாக நல்லஏற்பாடுகள் நடந்து வருகின்றன. அவ்வூரில் குழந்தை பெற்றால் அதைக்காப்பாற்ற முடியாதவர்கள் வைத்தியரிடம் சென்று கர்ப்பப்பையைத் திருப்பி வைத்துக்கொள்கிறார்கள். இதனால் கர்ப்பம் தரிக்காததுடனில்லாது, தம்பதிகளும் குடும்ப சுகங்களையும், புருஷன் மனைவி போகங்களையும் இடைவிடாது சந்தோஷமாக அநுபவிக்கிறார்கள்.

கர்ப்பத்தடைக்குப் பல வழிகள் கூறப்பட்டு இருக்கின்றன. சம்போக காலத்தில் ரப்பர் பைகளை உபயோகிப்பது ஒரு வழியாகும். இது அவ்வளவு உசிதமும் இன்பமும் உள்ள நல்ல வழியாக இருக்கமுடியாது. இதனினும் சிறந்ததாக மருந்துப்பிரயோகம் இருந்தால் அதனை இல்லறவாசிகளுக்குத் தெரிவிக்கவேண்டியது வைத்தியர்கள் கடமையாகும்

ஸ்திரீயின் பகிஷ்டை காலத்தைக்கொண்டு இவ்வளவு நாட்களுக்கு மேற்பட்ட பிறகு சம்போகம் செய்தால் கர்ப்பம் தரிக்காது என்று சிலர் சொல்கிறார்கள். இது எல்லா சந்தர்ப்பங்களிலும் பலிப்பதில்லை என்றும் சிலர் சொல்லுகின்றனர்.

தோழிகளே! தோழர்களே! தனக்கு மிஞ்சிய குழந்தைகளைப்பெற்று இருபாலரும் ஏன் கஷ்டப்படவேண்டும்? அன்பில்-ஆர்வத்தில்-உணர்ச்சியில் இல்லாத இன்பம் காமோபாதை தீரும் புணர்ச்சியில் உண்டா? தரிசனத்தில்-ஸ்பரிசத்தில்-சம்பாஷணையில் இல்லாத இன்பம் சம்போகத்தில் ஏது? நீங்கள் மற்றப் பிராணிகளைவிட மேம்பட்டவர்களானால், நல்வாழ்க்கை, சுக ஜீவனம், உலக இன்பம் யாவற்றையும் அடைய விரும்புவீர்களானால் சரியான தன்னடக்கத்துடன் தம்பதி வாழ்க்கையை நடத்த வேண்டும். அற்ப சரீர இச்சைக்கு அடிக்கடி இடங்கொடுக்கக் கூடாது. கெட்ட வழியில் இறங்கி ஆக்கையைப் பாழ்படுத்தக் கூடாது. தம்பதி வாழ்க்கையில் சாத்யமாகாத வழியில் கட்டுப்பாடும் கூடாதுதான். 'கர்ப்பமும் கூடாது, இச்சையும் பூர்த்திசெய்ய வேண்டும்' என்று எண்ணினால் நீங்கள் ரப்பர்களையோ, மருந்துகளையோ உபயோகித்துத் தீரவேண்டும். சரியான முறையில் கர்ப்பத்தடை ஏற்பட்டால் துன்பம் நீங்கும்; இன்பம் ஓங்கும்.

மனிதன் கல்வி கற்று அந்த ஞானத்தை உபயோகிப்பது எவ்விதமோ, நல்ல ஆகாரங்களைப் பொருக்கி எடுத்துப்புசிப்பது எவ்விதமோ அவ்விதமே கர்ப்பத்தடையும் காலநிலைமைக்குத்தக்க மிக்க அவசியமாகும்.




* அதிர்ஷ்டம் *

உங்களை நாடி வந்திருக்கிறது!

மிக சுலபம்! விடை சுருக்கம்!! பரிசு நிச்சயம்!!!

முடிவு தேதி **20—1—36.**

# ரொக்கப் பரிசு ரூ.750.

சரியான விடைக்குப் பரிசு ரூ. **500.**

முதலில் வரும் சரியான விடைக்குப் பரிசு ரூ. **100.**

அதிக விடைப் பரிசு ரூ. **100, 50.**

சரியானவிடை சீலிட்ட கவரில் காஞ்சீபுரம் "குமார விகடன்" ஆபீசில் டிபாசிட் செய்யப்பட்டிருக்கிறது.

விடை 1-க்கு கட்டணம் ரூ. 0—8—0 வீதம் மணியார்டர் ரசீதுடன் விடைகள் கீழ்கண்ட விலாசத்திற்கு 20—1—36-க்குள் அனுப்பவேண்டும். ஒவ்வொரு வரும் எத்தனை விடைகளையும் அனுப்பலாம்.

சப்தம கூட்டல் போட்டி

| | | |
|---|---|---|
| + | + | + |
| + | **7** | + |
| + | + | + |

+ இம்மாதிரி அடையாளமிட்ட இடங்களில் 13 வரை உள்ள எண்களில் பூர்த்தி செய்து எந்த வரிசையில் எந்த மூலைக்கு மூலையில் கூட்டினாலும் கூட்டுத் தொகை **21** வரவேண்டும். உபயோகித்த எண்ணை உபயோகிக்கக்கூடாது.

சரியான விடை 1-க்கு மேற்பட்டால் பரிசுத்தொகை பகிர்ந்து 25—1—36 ல் அனுப்பப்படும். இதன் முடிவு தெரிய விரும்புவோர் தங்கள் விலாசம் எழுதிய 1-அணா போஸ்ட் கவருடன் அனுப்புக.

மனேஜர் தீர்ப்பே சகல விஷயத்திலும் முடிவானதும் கட்டுப்படுத்துவதுமாகும். மானேஜர்,

ஸ்ரீ விவேகானந்தா நிலயம் (S)

ஆரணி. (N. A. Dt.)

# சுகாதாரப் பகுதி.

## நித்திரை.

தோழர், **A. B.** ஆதித்தர்.

சித்தன் மாலை 1- மணி 12ல் ஆசிரியர், C. P. சாமி அவர்கள் மேற்கண்ட தலையங்கத்தின் கீழ் எழுதியகட்டுரையில் இடதுகைப்புறமாகச் சாய்ந்து படுக்கவேண்டுமென்று குறித்திருந்ததைப் படித்த தோழரொருவர் சுமார் 30-வருடங்களுக்கு முன்னுள்ள ''சுகசந்தர்சன தீபிகை'' என்னும் பழைய பத்திரிகையின் 105-ம் பக்கத்தில் 'நித்திரை' என்ற கட்டுரையைக் காட்டினார். அதில் 'அதிக நேரம் இடது விலாப்புறமாகப் படுக்கக்கூடாது' என்று பொறிக்கப்பட்டிருக்கிறது. இரத்தாசயம் இடது பக்கத்தில் இருப்பதால், வலதுபுறத்தில் சாய்ந்து படுத்துத் தூங்கினால், இரத்தாசயம் மேலே இருப்பதால் அதன் வேலையை நன்றாகச் செய்யுமென்று ஆங்கில வைத்தியர்கள் சிலர் கருதுவதாகவும் நாம் கேள்விப்பட்டதுண்டு.

சுவாமி சச்சிதானந்த சுவாமி அவர்கள் தமது 'ஜீவப்பிரம ஐக்கிய வேதாந்த ரகஸ்யத்தில்' இடதுபுறமாகச் சாய்ந்திருப்பதையும், இடப்பக்கமாகப் படுப்பதையுமே ஆரோக்கியவழியாகக் கூறியுள்ளார். முற்றுமுணர்ந்த தேரையரும் ''இடது கையில் துயில்வோம்'' என்றார்.

வைத்தியர்கள், அறிஞர்கள் கூறும் ஆரோக்ய விதிகள் ஒன்றுக்கொன்று முரண்படுகையில் நாம் நமது சொந்த அநுபவத்தைக்கொண்டு எது சரியென்று தெரிந்தெடுத்துக் கொள்ளவேண்டும். போஜனம் செய்தவுடன் வலப்புறம் சாய்ந்து படுப்பவனுக்கு ஆகாரம் ஜீரணமாவதில்லை. ஏனெனில் நம் தேகத்திலிருக்கும ஜீரணக்கருவிகள் இடதுபுறத்திலேயே இருக்கின்றன. வலது பக்கம் சாய்ந்து படுத்தால் அக்கருவிகள் மேலே தூக்கப்பட்டு ஒழுங்காக வேலை செய்வதில்லை. ஆகவே கொஞ்சநேரம் வலதுபுறமாகப் படுக்க வேண்மென்று ஆசையிருந்தாலும் ஆகாரம் ஜீரணமாகிய





பின்பே அப்படிச் செய்யலாம். உலகமே மகாவிஷ்ணுவினுடைய வயிறுதானென்பதும், இதிலுள்ள ஜீவராசிகள் செத்துமடிந்து ஜீரணமாகாமல் உயிருடன் இருக்கவேண்டுமென்ற கிருபா நோக்கத்துடன் மகாவிஷ்ணு வலதுபுறமாக சயனிக்கிறாரென்பதும் புராண, வைணவ ஐதீகமாகும். இந்த சம்பிரதாயப்படியே திருமால் வலதுபுறமாக சயனிப்பதாக ஓவியக்காரர்களும் வரைந்துள்ளார்கள்.

சுவாசமானது இடது நாசியிலும், வலது நாசியிலும் மாறி மாறி ஓடிக்கொண்டிருக்கக் காண்கிறோம். எனினும் நாம் நம்மால் இயன்றவரை ஷெ சுவாசத்தை வலது நாசியிலேயே ஓடும்படி பழக்கம் செய்துகொள்ளவேண்டும். ஒருவன் சுகமாகவும், சந்தோஷமாகவும் இருக்கிறானென்பதை அவனது வலது நாசியில் சுவாசம் போய்க்கொண்டிருப்பதால் கண்டறிந்துகொள்ளலாம். சுவாசமானது வலது நாசியில் ஓடிக்கொண்டிருப்பதைவிட இடது நாசியில் வேகமாக ஓடிக்கொண்டிருப்பதால் ஆயுசு குறைகிறது என்றுதான் சொல்லவேண்டும். இதன் மூலம் வலது நாசியில் சுவாசம் ஓடிக்கொண்டிருப்பதாலேயே தீர்க்காயுள் சித்திக்குமென்று யோகிகள் கூறுகிறார்கள். வலது நாசியில் சுவாசம் ஓடிக்கொண்டிருக்கையில்தான் ஜலமலோபாதைகளும்கூட ஒழுங்காக நிவிர்த்தியாகும். இடது பக்கம் சாய்ந்திருப்பதாலும், படுப்பதாலும் வலதுநாசியில் சுவாசம் ஓடும். ஒருவன் இடது பக்கம்சாய்ந்து படுத்தும் அவனதுவலதுநாசியில் சுவாசம்ஓடவில்லையானால் அவன் பிணியாளனாக இருக்கிறானென்றுதான் அர்த்தம். சுகதேகியாக இருந்தால் வலது நாசியிலேயே சுவாசம் ஓடும். ஆகவே ஆசிரியர், C. P. சாமி செப்பியபடி இடது பக்கமாகப்படுத்தே ''நித்திரை'' செய்யவேண்டும் என்று நாமும் நவில்கிறோம்.

---

கொழும்பில் ''சித்தன்'' கிடைக்குமிடம்.

**P. M. R. முத்துசாமி ரெட்டியார்,**

87, மாதாகோவில் வீதி,

ஸ்லேவ் ஐலண்டு, கொழும்பு.

# Modern Correspondence Institute,
**Main Road, Trivandrum.**

மூன்று மாதங்களில்
## ஆங்கிலம் கற்கலாம்.

தாய்ப்பாஷை மட்டும் நன்கு தெரிந்த எந்த வயது உடையவர்களையும் அவரவர்கள் வீட்டில் வைத்துக் கற்பிக்கப்படும்.

மூன்று மாதங்கள் கொண்டு ஆங்கிலத்தில் கடிதங்கள் எழுதலாம்!

ஆறு மாதங்கள் கொண்டு வியாசங்கள் வரையலாம்.

மூன்று வருடங்கள் எங்கள் ஒழுங்குப்படி கற்கக்கூடியவர்களுக்கு கேம்பிரிட்ஜ் சீனியர் (Cambridge Senior) பாஸ் பண்ணச்செய்து B. A., B. L., Bar-at-Law; I. C. S., B. E., டாக்டர் முதலிய பட்டங்களுக்கும் சேரலாம்.

இன்னும் ஸம்ஸ்கிருதம், ஹிந்தி, தெலுங்கு, மலையாளம் முதலிய பாஷைகளும் சோதிடம், ரேகை சாஸ்திரம், மாந்திரீகம், மெஸ்மெரிஸம் முதலிய சாஸ்திரங்களும் தபால் மூலம் கற்பிக்கப்படும்.

ஒவ்வொரு வகுப்புக்கும் மாதம் ஒன்றுக்கு
பீஸ் ரூபாய்

கூடுதல் விவரங்களுக்கு தபால் தலையுடன் எழுதவும். சாமர்த்தியமுடைய ஏஜண்டுகள் தேவை.

*Manager:—*

**Modern Correspondence Institute,**

S.I. Main Road, TRIVANDRUM.


அகத்தியர்
# குணவாகடம் 3000.

(சாமி விருதை, சிவஞான யோகிகள்.)

(462-ம் பக்கத்தொடர்ச்சி.)

தணியுமப்பா கிரேகத்தின் திடமுங் கூட
    தாகமுடன் பாலகனு மழுது வாடும்
கணிதமுடன் தூக்கங்கள் அற்றுப் போய்க்
    கழுத்தையுமே தொங்கவிட்டுக் குழந்தை—வாடும்
துணிகரமாய் விரலைத்தான் வாயில் இட்டுத்
    தள்ளியே கொள்ளுமப்பா குழந்தை தானும்
அணியான இரவில்தான்நோய் அதிகங் கண்டு
    அப்பனே காலையில்தான் தணியும் பாரே. (112)

பாரேநீ ரோகந்தான் நீங்கும் வேளை
    பக்குவமாய் இருமலுந் தொண்டைச்சத்தம் நிற்கும்
கூரேநீ ரோகந்தா னதிக மானால்
    குடிகெடுத்த உறக்கமுடன் பல்லிருகிக் காணும்
சீரான மூச்சடைப்புஞ் சலவை கண்டு
    சரீரத்தில் வியர்வையது தானே தோன்றும்
தீராத இசிவு—கண்டு குழந்தை அய்யா
    தீயனுகா வணங்காண் திண்ணந் தானே (113)

திண்ணமுடன் இந்தநோய் தீர வேண்டி
    திறமான மருந்தொன்று சொல்லக் கேளு
பண்டிதனே இரசகுன்னம் கடுகு பத்து
    பக்குவமாய்க் கொடுத்துவந்தால் வியாதி தீரும்
கண்மணியே வாந்திக்குக் கொடுத்தா யானால்
    கனமான கோழையது கீழே செல்லும்
அண்ணலேநின் கிருபையாலே இந்த ரோகம்
    அநேகமாய்க் குணமாகும் அறிவுள்ளோர்க்கே. (114)

## மாந்தம் இரைப்பு.

அறிவாய் குழந்தையுட மாந்த ரோகம்
அப்பனே சொல்லுகிறேன் அறிவாய்க் கேளு
குறியான பல்முளைக்கும் வயதில் காணும்
குறவளையின் துவாரம் இசிவு கண்டு
தெரிவான இந்த நோய் காணும் வேளை
தெளிவான சுவாசக்குழ லின்று வாரம்
சிறிதாகப் போவதினால் புப்புசத்துக் குங்காற்று
சிறப்புடனே தடைப்பட்டு நிற்குந் தானே. (115)

தானான ரோகத்தில் சுரமிராது
தக்கதொரு சுவாசமே கஷ்டமாகும்
மானான குழந்தைதான் திடீரென்று
மகத்தான மூச்சு-முட்டி உதைத்துக் கொள்ளும்
தேனான மூச்சதுதான் உள்ளே போகாமல்
தீங்கான மூச்சடைப்புக் கொஞ்ச நேரம்
கோனாகக் கொஞ்சநேரம் சென்றதானால்
குறவளையின் பிகுநீங்கும் குறிப்பான் பாரே. (116)

குதிப்பான சுவாசமது அடிக்கடி யேனும்
கணிதமுடன் நேரம்விட்டு நேரமேனுங்
அதிகமாய் வெகுநாட்கள் சென்றேனும்
அவனிதனில் பாலனுக்குக் காணும் பாரு
கதிப்பாகக் குறவளைக்குச் செல்லுகின்ற
கதிர்போன்ற ஸ்பரிச நரம்புக்கு வியாதி கண்டு
கொதிப்பான இந்தநோய் வருகுதென்று
கொற்றவனே தெரிந்துகொண் டுவைத்தி டாயே (117

உரைத்திட்ட வியாதிதான் தீர வேண்டி
உள்ளபடி பேதிக் கீய்ந்து முன்
பரைத்திட்ட மாந்தகுளி கையொன் றீய்ந்தால்
மகத்தான மாந்தந்தான் தீருமய்யா
குரைத்த குறவளை எப்போதும் போல
குணமாகிக் குழந்தைதான் வளருமய்யா
தரித்திட்ட ரோகந்தான் அணுகாமல் நின்று
தரணிதனில் வாழ்வார் தன்மை பாரே. (118)

(தொடரும்)

# இந்திய வைத்தியர் மகாநாடு.

### கர்னல் போலநாத்திற்கு கல்வி மந்திரியின் பதில்.

சென்னை கவர்ன்மெண்டு இந்திய வைத்தியப் பள்ளிக்கூடத்தில் 29—12—35-ல் கூடிய 5-வது இந்திய வைத்தியர் (எல். ஐ. எம்.) மகாநாட்டைத் திறந்துவைத்த சென்னை வைத்திய இலாகா மந்திரி கனம் எஸ். குமாரசாமி ரெட்டியார் அவர்கள் பேசியதாவது:— 'உங்கள் குறைகளைத் தெரிவித்துப் பரிகாரம் பெறுவதற்குச் சங்கமும், கிளர்ச்சியும் அவசியமாகும். உங்களுக்கு உடனே வெற்றி ஏற்படவில்லையென்று மனச்சோர்வடைய வேண்டாம். இப்பொழுது ஐந்தாவது மகாநாடே கூடியிருக்கிறது. ஐந்துவருஷங்களுக்கு மேற்பட்ட குறைகள் பல இன்னும் நிவர்த்திக்கப்படாமல் இருக்கின்றன. நீங்கள் முயற்சியைவிடாது நடத்துங்கள்.

" சமீபத்தில் கர்னல் போலநாத் என்ற ஒரு மாஜி ஐ.எம்.எஸ். உத்தியோகஸ்தர் இம்மாகாணத்தில் சுற்றிவருகையில், இந்திய வைத்திய முறையைப்பற்றி அனாவசியமாகக் குறைகூறிப்பேசி யிருக்கிறார். இந்திய வைத்தியப் பிரதிநிதி ஹோதாவில் வந்த ஒருவர், தகுந்தபடி விசாரியாமல் ஆதாரமின்றிக் குறைகூறியிருப்பதற்கு வருந்துகிறேன். இந்தியவைத்தியமுறைக்கு, மேல்நாட்டு வைத்திய முறைக்கு உள்ள அனுகூலங்கள் இல்லை. அரசாங்கத்தின் ஆதரவு அதிகமாக ஏற்படவில்லை. அதற்காக முறையைக் கண்டிப்பது புத்திசாலித்தனமாகாது. குறைகளிருந்தால் அவைகளை நீக்க வழி கூறுவதுதான் அழகு. பனகால் ராஜா இந்திய வைத்திய முறையின் விசேஷத்தை உணர்ந்து ஆதரவு அளித்தார். இந்தப்பள்ளிக்கூடமும், ஹாஸ்டலும் அவருடைய முயற்சியால் ஏற்பட்டவை. கர்னல் போலனாத் கூறிய புகார்கள் புதிதல்ல. அக்காலத்திலேயே பல போலனாத்துகள் இருந்திருக்கவேண்டும். எல்லாவற்றையும் ஆராய்ந்த பிறகே பனகால் ராஜா புராதீன வைத்தியமுறைக்கு ஆதரவளிக்க முடிவு செய்தார். ஆகவே நீங்கள் அதைரியப்பட

வேண்டியதில்லை. போலனாத்துகள் வந்துபோய்க்கொண்டுதான் இருப்பார்கள். அவருடைய பிரசாரத்திற்கு தேசத்தில் பலமான கண்டனம் ஏற்பட்டிருப்பதில் ஆச்சரியமில்லை. சீக்கிரத்தில் இது மறந்துவிடப்படுமென்று நம்புகிறேன். ஜனங்கள் இன்றைக்கும் புராதீன வைத்திய முறையிலேயே அதிக நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். ஆகவே கிராம ஜனங்கள் நிர்ப்பந்தித்து மேல்நாட்டு வைத்திய வசதியை அவர்களுக்கு ஏற்படுத்த முடியாது. உண்மையான நிலைமையையும், தேவையையும் அறிந்து நடத்த வேண்டும். ஆராய்ச்சிவேலை அவசியமே. அதற்குப் பணம் மாத்திரம் அன்றித் தகுதியான மனோபாவமுடைய மனிதர்களும் வேண்டும். ஆராய்ச்சிவேலை பலனளிக்கப் பல வருடகாலம் பிடிக்கும். பொறுமையுடன் வேலை செய்யவேண்டும். இன்று உங்கள் மகாநாட்டிற்குத் தலைமைவகிப்பவரே இந்திய வைத்திய முறையின் சிறப்புக்கு உதாரணமாவார். அவரைவிடத் தொழிலில் மதிப்பு பெற்றவர்கள் யார் இருக்கிறார்கள். மேல்நாட்டு முறையில் உள்ள நல்ல அம்சங்களைப் பொறுக்கி நமது முறையில் சேர்த்துக் கொள்ளவேண்டும். சந்தோஷத்துடன் இம்மகாநாட்டைத் திறந்துவைத்து அது வெற்றிகரமாக நடக்குமாறு பிரார்த்திக்கிறேன்'' என்று பேசினார்.

## தலைவர் பிரசங்கம்.

ஜனாப் சைதுலாப்தீன் சாகிப் அவர்கள் தலைமை வகித்துப் பேசியதாவது:— ''கவர்ன்மெண்டார் இந்திய வைத்திய முறைக்குத்தக்க ஆதரவும் அங்கீகாரமும் அளிக்காததால் பலமான கிளர்ச்சி நடத்தப்பட்டதின்பேரில் 1921-ல் ஸர் முகமது உஸ்மான் தலைமையில் டாக்டர் ஜி. ஸ்ரீனிவாசமூர்த்தியைக் காரியதரிசியாகக் கொண்டு ஒரு விசாரணைக்கமிட்டி பனகால் ராஜாவால் நியமிக்கப்பட்டது. இந்தக்கமிட்டி தீர விசாரணை செய்து மிகவும் முக்கியமான ஒரு யாதாஸ்தைக் கவர்ன்மெண்டுக்குச் சமர்ப்பித்தது.

அந்த யாதாஸ்தில் முடிவான லக்ஷ்யம் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது:— ''இந்திய வைத்திய இலாகா ஒன்று தனியாக இந்திய வைத்தியமுறைக் கமிஷனர் ஆதிக்கத்தில் ஏற்படவேண்டும். வைத்திய சுகாதார இலாகாக்களின்



மந்திரி ஆதிக்கத்தில் இது இருக்கவேண்டும். இந்திய வைத்தியமுறையை அனுசரித்தபொதுச் சபை ஒன்று இந்தஇலாகாவின் கொள்கையை நிர்ணயித்துவரவேண்டும்''.

இதிலிருந்து கவர்ன்மெண்டார் மேல்நாட்டு முறையைத் தங்கள் செல்வப்பிள்ளையாக மதிக்கக் கூடாதென்றும், இந்திய வைத்திய முறையை மாற்றாந்தாய்மாதிரி நடத்துவதை விட்டுவிடவேண்டுமென்றும் ஏற்படுகிறது. புதிய சீர்திருத்தத்தில் மந்திரிகள் அதிக அதிகாரம் பெறப்போவதால் அவர்கள் தைரியமாக ஜனங்களுடைய தேவைகளை அறிந்து நடத்திவைக்கவேண்டும். இந்திய வைத்திய முறையை ஆதரிப்பதுதான் சுதேசியத்தில் முக்கிய அம்சமென்றுணரவேண்டும். இந்தியவைத்திய முறைக்காக ஒரு தனிஇலாகா இல்லாவிட்டால், உஸ்மான் யாதாஸ்தில் கூறப்பட்ட பல அபிவிருத்திகளையும் நடத்திவைக்க முடியாது. இந்திய வைத்தியப் பள்ளிக்கூடத்தில் இன்னும் பல வழிகளில் விஸ்தரிப்பு அவசியமாயிருக்கிறது. மத்திய இந்திய வைத்திய கலாசாலைக்கு இதை ஒருவித அஸ்திவாரமாகக்கொண்டு அவசியமான அபிவிருத்திகளை நடத்திவைக்கவேண்டும். நமது இந்தியமுறை தனித்து நின்றால் செழிப்புற முடியாது. தற்கால நிலைமைக்கேற்றபடி மேல்நாட்டு முறையிலுள்ள நல்ல அம்சங்களை சேர்த்துக் கொள்ளவேண்டும். ஆயுர்வேத, சித்த, யூனானி வைத்தியர்களுக்கு மேல்நாட்டுப் படிப்பும் ஓரளவு அவசியமாகும். தகுந்த யோக்கியதை உடைய இந்திய வைத்தியர்களின் ஜாப்தாவைப்போல் தகுதியான, நம்பிக்கையான மருந்துசாலைகளின் ஜாப்தாவும் தயாரித்துவைக்கப்படுவது அவசியமாகும். இந்தியவைத்திய முறை பழிக்கப்படுவதற்கு ஒரு காரணம் மருந்து சரியான வழியில் தக்க பொருள்களைக்கொண்டு செய்யப்படாததாகும். கவர்ன்மெண்டாரே இந்திய மருந்துகளைத் தயாரித்து லோக்கல் போர்டு வைத்தியசாலைகளுக்கு கொடுக்க ஒரு மத்தியபோர்டை ஏற்படுத்தவேண்டும். இந்திய முறைக்கும் மேல்நாட்டு முறைக்கும் போட்டி இருக்கக் கூடாது. இரு பிரிவினரும் ஒத்துழைத்துப் பரஸ்பர மதிப்புடன் நடந்துகொள்ளவேண்டும். இதன் மூலமாகவே பொதுஜனங்கள் அனுகூலமடைய முடியும். வைத்திய ஞானமும் அதிகம் பரவும்'' என்று பேசி முடித்தார்.

# நாட்டு வைத்தியம்.

இந்தியாவின் சுதேசவைத்தியத்தைக் குறைகூறி டாக்டர் போலநாத் வெளியிட்டிருக்கும் அபிப்பிராயத்தை கவனிக்கத்தக்கது. ஆயுர்வேத வைத்திய முறையும், வைத்தியர்களும் உபயோகமற்றவர்களென்றும், இவ்விஷயத்தில் சர்க்கார் பணம் செலவிடுவது வீண் காரியமென்றும், கர்னல் போலநாத் கூறுகின்றார். ஐரோப்பிய வைத்திய முறையில் டாக்டர் போலநாத் உயர்ந்தவர். இந்தியன் மெடிகல் சர்விசிலிருந்து பென்ஷன் பெற்றவர். இந்திய வைத்திய சங்கத்திற்கும் இவர் தலைவராயிருக்கின்றார். பொறுப்புள்ள பதவி வகிக்கும் டாக்டர் போலநாத், நாட்டு வைத்தியத்தைப் பற்றி இவ்வளவு கேவலமாகப் பேசியிருப்பது வருந்தக்கூடியதாகும். அனாதி காலந்தொட்டு, இந்நாட்டில் கையாடிவரப்பட்டிருக்கும் நாட்டு வைத்தியம், உலகத்திலேயே சிறந்ததென்று நாம் சொல்லவில்லை. ஆயினும், நாட்டு வைத்தியம் மிகவும் சிறப்புள்ளதென்பதை, உலகத்துப்பெரியோர்கள் பலர் ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள். ஆச்சர்யமான அநேக நல்ல மருந்துகள் நாட்டு வைத்திய முறைகளில் அடங்கியிருப்பதுடன், இந்நாட்டு மக்களின் தேகக் கூறுக்கும் சீதோஷ்ண நிலைமைக்கும் மிகவும் பொருத்தமானது நாட்டுமருந்துகளேயாகும். இக்காலத்திற் கேற்ற முறையில், நாட்டு வைத்தியம் திருத்தப்பட்டு முன்னேற்ற மடையவில்லையென்பதை நாமும் ஒப்புக்கொள்ளுகின்றோம். நாட்டு வைத்தியர்களில் பெரும்பான்மையோர் இக்காலத்திய சாஸ்திரீகமான நல்லறிவில் பயிற்சி பெறாமல், கிணற்றுத் தவளைகளாயிருக்கின்றார்கள் என்பதில் சந்தேகமில்லை. மூடக்கொள்கைகளும், அவர்களிடத்தில் நிறைந்திருக்கின்றதென்பதையும் நாம் ஒப்புக்கொள்ளுகின்றோம். ஆயினும், நாட்டு வைத்திய முறைகளை, சீர்படுத்தி அபிவிருத்தி செய்வதில் பிரயோஜனமில்லையென்று கர்னல் போலநாத் போன்ற அறிவாளிகள் கூறுவது தவறாகும்.





நம் நாட்டு வைத்திய முறைகளை, இக்காலத்திற்கேற்ற ஒழுங்கான முறையில் சீர்படுத்தி அமைப்பதற்கு போதிய அளவு பணமும், முயற்சியும் சர்க்கார் செலவிடவில்லையென்பதே இந்நாட்டுமக்களின் மனக்கவலையாகும். இக்குறையை நீக்கி, நாட்டு வைத்தியத்தை முன்னுக்குக் கொண்டுவர, சென்னை சர்க்கார் சென்ற பத்து வருடங்களாக முயற்சி செய்து வருகின்றார்கள். சென்னையிலுள்ள சர்க்கார் இந்திய வைத்தியக் கல்லூரியில் மாணவர்கள் பயிற்சி பெற்றும் வருகின்றார்கள். இவ் விஷயத்தில், இன்னும் அதிகமான பணம் செலவிட்டு, நல்ல முறையில் வைத்தியக் கல்லூரியை நடத்த வேண்டுமென்று நாமும் சர்க்காருக்கு கூறி வருகின்றோம். சர்க்கார் கல்லூரியில் நாட்டு வைத்தியம் கற்றுத் தேறி வெளிவரும் வைத்தியர்களுக்கு நாட்டு வைத்தியமும் நன்றாகத் தெரியவில்லை; இங்கிலீஷ் வைத்தியமும் பயிற்சியில்லை. இக்குறையைபோக்க வேண்டுமேயன்றி, கலாசாலையையே மூடிவிட வேண்டுமென்று சொல்வது அவசரப் புத்தியென்றே கூறலாம். ஒன்று மறியாத, நாட்டு வைத்தியர்களைவிட, சர்க்கார் கல்லூரியில் நாட்டு வைத்தியம் கற்றுத் தேறியவர்கள் மேல் என்பதை டாக்டர், போலநாதரும் ஒப்புக்கொள்வாரென்று நம்புகிறோம். அகஸ்தியர், சரகர், தன்வந்திரி, திருமூலர் ஆகிய வைத்தியர்களின் பெயர்களைச் சொல்லிக்கொண்டு காலந்தள்ளும் நாட்டு வைத்தியர்கள், கர்னல் போலநாத் கூறும் கண்டனங்களைக் கவனிக்க வேண்டுகிறோம்.

(தமிழ் நாடு)


## "லோகோபகாரி."

### பழமையும், புதுமையும் கொண்ட வாரப்பத்திரிகை.

42–ம் ஆண்டு நடக்கிறது.

இனியகதைகள், தேசீய பாடல்கள்–ஆராச்சிக் கட்டுரைகள்-உலகாதிசயங்கள் முதலியன கொண்டு இனிய எளிய செந்தமிழில் எழுதப்பட்ட செய்தி துணுக்குகள் பொதிந்து வெளிவருகின்றன. இன்றே சந்தாதாராய்ச்சேருங்கள்.

வருடசந்தா ரூ. 4—0—0.

"லோகோபகாரி"
சிந்தாத்திரிபேட்டை, சென்னை.

## மதிப்புரை.

### "கேசரி"

தோழர், சி. நாகப்பன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு கோவையினின்றும் வெளிவரும் "கேசரி" மாதவெளியீடு ஒன்று வரப்பெற்றோம். இதில் பல அறிஞர்கள் எழுதிய உணர்ச்சி ததும்பும் சீர்திருத்தக் கதைகள் மலிந்து காணப்படுகின்றன. இப்பத்திரிகையின் நோக்கமே உணர்ச்சியும், எழுச்சியுமுள்ள கதைகள் மூலமாக உலக நவீனத்தையும், சீர்திருத்தத்தையும் மக்கள் மனதிடை போதிப்பதென்றே ஆசிரியரின் குறிப்பும் காணப்படுகிறது. சந்தா குறைவு. பக்கங்களதிகம். மேல்புற அட்டையின் வனப்பும், புதுமையும் கண்ணைக் கவரத்தக்கதாயுளது. இதைத் தமிழர் ஒவ்வொருவரும் ஆதரிக்கவேண்டியதவசியம்.

வருட சந்தா ரூ. 1.

கிடைக்குமிடம்:- "கேசரி"

கோயமுத்தூர்.

### "இந்திய கேசரி."

கொழும்பிலிருந்து வெளியாகும் ஓர் உயர்தரப் பத்திரிகை. இது ஜஸ்டிஸ் கக்ஷியின் கொள்கையைத் தழுவி, பிராமணரல்லாதாருக்காக உழைப்பதே இப் பத்திரிகையின் நோக்கம். பிராமணரல்லாதார் யாவரும் இதை வாங்கி வாசிக்கவேண்டும்.

வருடச் சந்தா ரூ. 3—0—0.

,, சதம் 50.

மானேஜர்,

"இந்திய கேசரி",

தபால்பெட்டி: 362,

கொழும்பு.

## நாடகப்பகுதி.

### நாகானந்தன்.

( லேட் H. ராமசாமி அய்யர் அவர்களால் எழுதப்பட்டது. )

(மாலை 1 மணி-12-471-ம் பக்கத்தொடர்ச்சி)

அங்கம் 3.] களம் 3]

வரகுணன், நாகானந்தன்.

காலம்—மாலைப்பொழுது. இடம்—உத்யான வனம்

வரகுணன்:– (தனிமொழி) சுகுணன் அவனுடைய பதினெட்டாம் வயதில் முடி சூடி ஆக்ஷிபுரியலாயினன். இது சமயம் அவனுக்கு வயது அறுபது ஆயது. அவனுக்குப்பின் இப்பாண்டிய நாட்டை ஆளுதற்கோ ஆண்மகவில்லை. பிறந்துள்ள பெண்ணாகிய சுகுணசுந்தரியை சுந்திரகுமாரனுக்கு மணம் செய்துவைத்து அவனையேபாண்டிய மன்னனாக ஆக்க வேண்டுமென்பது எங்கள் அனைவர்தம் எண்ணம். அவ்விதமிருக்க அவள் அவனைக்காதலிப்பதாய் விளங்கவில்லை. அது பற்றி விவாகமும் நடைபெறாது உளது. இது விஷயமிவ்வாறிருக்க, ஏக புத்திரியான சுகுணசுந்தரியோ மதயானையால் எடுக்கப்பட்டதுமுதல் ஏதோ நோயுற்று தினே தினே க்ஷீணித்து வருகின்றாள். அவள்தன் விளையாடலும், மன உத்சாகமும் மாறியது. ஒவ்வோர் சமயத்தில் பிரமணம் கொண்டவள்போல் தோற்றுகின்றனள். மற்றோர் சமயம் துக்காகிரந்தையாய் மாறுகின்றனள். பின்னோர் சமயம் எதையோ கண்டு ஏங்குவதுபோன்று மாறுகின்றனள். இதுவென்ன பேய்க்குணமா? அன்றி நோய்க்குணமா? இவ்விரு விஷயங்களுக்கும் செய்யாத சிகிச்சையே இல்லை. அவ்வாறு இருந்தும் அவள் குணப்படவே இல்லை. அந்தோ! இவ்விதம் இன்னும் சின்னாளிருப்பின் அவள் கதி என்னாமோ? இதனை காதல் நோய் எனக்கருதக் காரணமில்லையே. அவளைச் சுந்திரகுமாரனுக்கு நிச்சயித்திருப்பது அவள் அறியாததல்ல. அப்படியிருக்க வேறு யாவர்பால் காதல்கொள்வள்? பிறர் முகமே பார்த்தறியாதவளன்றோ? (மௌனம்)

ஆம்; ஆம்; அன்று அவளை யானையின் அஸ்தத்தினின்றும் மீட்டவன் நாகானந்தனன்றோ! அவனது மடிமிசையன்றோ அவள் சயனிக்கலாயினள். அது சமயம் அவள் பிரக்ஞை தப்பி இருப்பாள் என நாங்கள் எண்ணினோம். எங்கள் எண்ணம் தவறாயன்றோ முடிந்ததுபோலுளது. இருவருமோ பரஸ்பரம் காதலிக்கத் தகுந்தவரே. கல்வியிலும், குலத்திலும், குணத்திலும், வனப்பிலும் ஒருவர்க்கொருவர் குன்றியவரல்லர். அவர்கள் விவாகத்தில் தமிழ்நாட்டுக்கு மும்மன்னர் என்னும் வழக்கு பொய்த்து, அது ஏக ஆக்ஷிக்குட்பட்டதென மாறும். ஏக பாஷையும், ஏக மதமும், ஒரே வித நாகரீகமும் அபிவிருத்தியாகி, முன்னாட்டுப் பிரஜைகளும் ஏகபோகமாய் வாழ்வர். (மௌனம்)

கொஞ்சதினங்களுக்குமுன் நான் வீரகேசரியைக்கண்டு பேசிய சமயம் அவன் பிரதம சேனாதிபதியாருக்கு சற்று தேக அசௌக்கியமென்றார். நிர்விசாரமாயிருப்பானானால் அவனுக்கு தேக உபாதை ஏன்? ஆதலால் அவனை விசாரத்திற்குள்ளாக்கும் விஷயமும் உளது. சுகுணன் அவனை புத்திரனிலும் அதிகமே நேசிக்கின்றனன். சோணாடு வென்றதனால் எல்லோராலும் அதிகமாய்ப் புகழப்படுகின்றனன். உபசேனாதிபதிகளும், சேனாவீரர்களும் அவனிடம் அடங்கி ஒடுங்கி, அன்புகாட்டி ஆதரவாயுளர். அவன் இச்சித்த எதையும் அடையும் வருவாய்மிக்குளது. அவன் சொல் அங்கத்தினர் பலரால் நன்கு மதிக்கப்படுகின்றது. அவன் குறித்த காலங்களில் மிதமே போஜனம் செய்யும் வழக்கம் பெற்றவன். கவலை சற்றுமின்மையால் அவன் நிம்மதியாக நித்திரை செய்கிறான். இவ்வாறிருக்க அசௌக்கியத்திற்குக் காரணம் என்ன? (மௌனம்)

இவ் அசௌக்யத்தால், அவர் போர்பயிலும் மேடைக்கு முன்போல் வருவதில்லை. சதா தனித்திருத்தலை நாடுகின்றனர். பூஞ்சோலை சென்று அங்கு உலாவுதலிலும், தனித்திருத்தலிலுமே காலங்கழிக்கின்றனர் என்றனன்றோ செப்பினன் வீரகேசரி. இதுதான் காமநோய். இவனுக்கு யாரிடம் காதல் எழுந்திருத்தல் கூடும்? இவன் காதலிக்க ஏற்றவள் சுகுணசுந்தரியே. அன்றுதான் அவன் அவளைக் கரத்தால் எடுத்தான், தன் மடிமிசை படுப்பாள் விடுத்தான்.



அதுபற்றி இருவருக்கும் நோக்கு ஏற்பட்டிருத்தல் வேண்டும். ஸ்பரிசம் இருவருள்ளும் ஏற்பட்டதால் இவர்களுக்குள் காதல் பெருகாது என் செய்யும்? ஆதலின் இவன் உறுவது காமநோயே. (மௌனம்)

சுகுணசுந்தரி நாகானந்தனது குலமறியாக் காரணத்தால் தன் மெய்க்காதலை மறைத்து அவஸ்தைப் படுகின்றனள். நாகானந்தன் அவள்தன் உயர்குலம் கருதித்தன் மெய்க்காதலை வெளியிடாது காத்து உபத்திரவப்படுகிறான். இப்பொழுதுதான் எல்லாம் காதலா கமலம்போல் வெளியாகின்றது. இனியவன் குலப்பெருமையை மறைத்தல் தகாது. சுகுணனுக்கு இவனை இன்னானென்று எடுத்துச் செப்புவேன். இருவர்தம் காதலைக் கூறுவேன். திருமணம் முடிக்கத் தூண்டுவேன். (மௌனம்)

யார் அங்கு மதில்புறம் நின்று உத்தியானவனம் நோக்குவது? ஆம்; அவன்தான் காகானந்தன். நான் நினைக்கவும் அவன் என் முன் வந்தான். ஆதலின் அவனுக்கு வயது நூறு. அவன் வந்ததெல்லாம் உத்தியானம் நுழையும் கள்ள மார்க்கம் உளதோ? அவ்வழி உள்ளேகி உலாவுதல் பொருட்டு வரும் சுகுணசுந்தரியை சந்தித்தல் முடியுமோ? முடியுமாயின் தன் காதல் முற்றும் அவளுக்கு அறிவித்தல் கூடுமோ? என்னும் விஷயங்களை அறிதற்பொருட்டேயாம். ஆதலின் அவனை எதிர்கொண்டழைத்து வருவேன். உத்தியானம் புகுதற்கு அனுமதி தருவேன். இருவர் சந்திப்பு என்ன பயனை விளைவிக்கின்றதோவென அறிவேன். (மறைதல்)

(இருவரும் போந்து)

வரகுணன்:— குழந்தாய் நாகானந்தா! எது ஒரு நாளுமிலாது இன்று இவ்விடம் வந்தது? யாதுகாரணம்பற்றி அங்குமிங்கும் நோக்குகின்றாய்?

நாகானந்தன்:— சொற்ப தினங்களுக்குமுன் மன்னவர் வளர்க்கும் மான் கன்றுகள் வைகையாற்றங்கரை ஓரமே விளையாடுகையில் கட்டினின்றும் அவிழ்த்துக்கொண்ட ஒரு வேட்டை நாய் அக்கன்றுகளில் ஒன்றைத் தாவிப்பிடித்துக் கொல்ல முயன்றது. அதுசமயம் அங்கு உலாவச்சென்ற யான் அம் மான்கன்றினை அந்நாயினின்றும் காத்தேன். அக்கன்றுதன் மிரண்ட பார்வையும், உடலின் அமைப்பும்

என் மனங்கவர்ந்தது. மீட்சிபெற்ற அது தன் குழாத்துடன் கூடி மின்னென மறைந்தது. பின்னுமொரு முறை அதனைக் காண என் மனத்தில் அவா எழுந்தது. அதுபற்றி அதனை நாடி வந்துளேன் அது வதியும் இப்பூஞ்சோலை. இதன் கடிகாவல் கண்டு, வெளிப்புறம் நின்று அங்குமிங்கும் பார்த்தேன். காண்பது சாத்தியமல்லவென உணர்ந்தேன். என்னுடைய உறைவிடம் செல்லக் கருத்துக்கொண்டுள்ளேன்.

வரகுணன்:— (தன்னுள்) அம்ம! என்ன வாய்மை? உண்மை உரையாடப் பழகியவன் வெள்ளையாய் மொழிதல் தவறென எண்ணி, மறைபொருளாய் வந்துள நோக்கம் கூறினன். நானும் அவ்வாறே பகன்று உட்புக விடைதந்து இருவருக்கும் சந்திப்பினை ஆக்குகின்றேன். (பிரகாசமாய்) குழந்தாய்! நீ தேடிவந்த மான் கன்றுகள் வாழும் வனமிதுவே. அவற்றிற்குப் பிறரால் துன்பம் நேரிடாவண்ணமே இம்மதிற்சுவரும், காவலும் அமைந்துள்ளன. மானிட சுபாவம் தமக்கு உரிமை இல்லாதனையும் காமுறும் இயல்பினது. அவ்விதம் பிறர் பொருள் வெளவும் இயற்கையுளார் கண்ணில் படாமல் இக்காப்பு அமைந்துளது. நீயோ அவ்விதத் தன்மையிலாய். அதுபற்றி யுட்புகுந்து காண விரும்பியதைக் கண்டு செல்லலாம்.

நாகானந்தன்:— ஐயன்மீர்! தமது கருணைக்கும் என்பாற் கொண்டுள்ள நல்லெண்ணத்திற்கும், அனந்தம் வந்தனம் தந்தேன். இது இளவரசியார் உலாவுதற்பொருட்டேற்பட்ட பூஞ்சோலையன்றோ? ஆனதால் ஆடவனும் யான் புகுதல் தகுமோ?

வரகுணன்:— குழந்தாய்! ஆம்; அது உண்மையே. சுகுணசுந்தரி உன்னால் மதயானையினின்று மீட்கப்பட்டது முதல் ஏதோ வியாதிகொண்டு கன்னிமாடம் விட்டகலாது காலங்கழிக்கின்றனள். தவறி அவள் வரினும், அவள் கண்ணிற்படாது மறைவே திரும்புக.

நாகானந்தன்:— ஐயன்மீர்! அவ்வாறே ஆகுக.

வரகுணன்:— குழந்தாய்! என்பின் வருக. காவலாளிகாள்! பிரதம சேனாதிபதியாருக்கு உத்தியானவனம் நோக்க அனுமதி தந்துளேன். அவர் எது சமயம் திரும்பினும் தடையிலாது வெளியே விடுக.

(தொடரும்)


# பூபதி செந்தூரம்.

இதை உட்கொண்டால் ஜுரம், ஜன்னி, வாந்திபேதி, வயிற்றுப்போக்கு, மகமாரி (பிளேக்) பித்தம், கிறுகிறுப்பு, சூலை, குன்மம், சுவாசகாசம், கபம், வாதம், உடல்வலி, பொருமல், அண்ட வாய்வு, சூதக வாய்வு, பக்கவாதம் முதலிய நோய்கள் தீருவதோடு பிள்ளைபெற்ற பெண்களுக்குண்டாகும் எல்லா நோய்களும், குழந்தைகளுக்கு உண்டாகும் மாந்தங்கள், தோஷங்கள் ஜுரம், ஜன்னி, இருமல் முதலிய சகல நோய்களும் குணமாகும்.

தோலா 1-க்கு விலை ரூ. 4—0—0.

தோலா $\frac{1}{4}$-க்கு விலை ரூ. 1—0—0.

# மேகாமிர்த பஸ்பம்.

வெள்ளை, நீர்க்கடுப்பு, வெப்பம், நீர்ச்சிறுப்பு, மேகக்காங்கை, பலவித நீரழிவுகள், மூலக்காங்கை, என்புருக்கி நோய், உறக்கத்தில் விந்து கழிதல், தூன்முகம், வாய்ப்புண் முதலிய வெப்பநோய்கள் குணமாகும்.

விராகனிடை 1-க்கு விலை ரூ. 2.

# கபகுடோரித் தைலம்.

இதை காலை மாலை இருவேளை சாப்பிட்டுவர காசம் இளைப்பு, (சுவாசகாசம்) குழந்தைகள் இளைப்பு, இருமல் மந்தம், மலக்கட்டு முதலியன நீங்கி நல்ல பசியுண்டாகும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 2.

(தபால் சார்ஜ் வேறு)

கிடைக்குமிடம்:—

**சாமி, விருதை சிவஞான யோகிகள்**

**சிவஞான சித்தபார்மஸி கோவில்பட்டி.**

வெளிவந்துவிட்டது!    வெளிவந்துவிட்டது!

ஓர் இனிய தமிழ் நாவல்

# இராஜேந்திர சுந்தரி

அல்லது

## தியாகச்செல்வனின் தீரச்செயல்.

ஸ்ரீமான் ப. மு. ரா. முத்துச்சாமி ரெட்டியார்
அவர்களால் எழுதப்பட்டது

இதில் உலக வாழ்க்கை என்பது யாது? கணவன் என்பவர் யார்? நமது கடமை என்ன? என்பன போன்றவைகளையும், காதல் மணமே சிறந்ததென பல மேற்கோள்களுடன் விளக்கப்பட்டிருப்பதையும், கொடுங்கோன் மன்னர் வாழும் நாட்டில் கடும்புலி வாழும் காடு நன்றே என்பதையும், பல நீதிமொழிகளையும், மற்றும் பல விஷயங்களையும் காணலாம். தமிழ் மக்களாகிய ஆண் பெண் இருபாலரும் படிக்க வேண்டியது அவசியம். சுமார் 350-பக்கங்கள் கொண்ட இந்நாவலின் இரண்டு பாகங்களின் விலை ரூ. 1-8-0 தான்.

---

# உண்மைக் காதல்

அல்லது

## பரிமளா ராகவன்

என்னும் ஓர் இனிய தமிழ் நாவல்.

ஸ்ரீமான் ப. மு. ரா. முத்துச்சாமி ரெட்டியார்
அவர்களால் எழுதப்பட்டது.

உண்மைக்காதலுக்கு அழிவில்லை என்றும், பதிவிரதா தர்மமும் சன்மார்க்கமும் சிறந்ததென்றும், பல இடையூறுகளேற்படினும் உண்மைக்காதல் வெளிப்பட்டு நிலவுமென்றும், காதலருக்கேற்படும்தடைகளைத் தகர்ப்பதற்கேற்ற கருவியாகவே அக்காதல் துணைபோகிறதென்றும், பாமரரும் படித்தறியக்கூடிய எளிய தமிழ் நடையில் வெளிவந்துளது.

இதன் விலை அணா 0—8—0.

தேவைக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர், சித்தன், பழனி.




# மலையப்பசாமி வைத்தியசாலை,

## பழனி.

## சகல வியாதிகளுக்கும்

உயர்ந்த மருந்துகள் இருக்கின்றன.

அவைகள் ஒவ்வொன்றும் குணத்தில் மேன்பட்டதென ஆயிரக்கணக்கான நற்சாட்சிகள் பெற்றிருக்கின்றன.

அல்லாமலும்

**பட்டங்கள், பதக்கங்கள், மெரிட் சர்டிபிகேட்கள்**

எத்தனையோ மகாநாடுகளில்
எங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

போலி மருந்துகள் மிக மலிந்துகிடக்கும் இக்காலத்தில் பொதுமக்கள் உண்மையறிந்து மருந்துகளைவாங்கி உட்கொள்ளுங்கள்

தாம்பிரம், க்ஷயரோக அதிபர், டாக்டர், C. முத்து, M. D., M. R. C. S., L. R. C. P., அவர்கள் தலைமையில் 1935-ல் சென்னையில் நடைபெற்ற அகில இந்திய சித்தவைத்திய முதலாவது மகாநாடு மருந்து மூலிகைக் கண்காக்ஷியிலும், சென்னை, வைத்தியரத்னம், R. பரதசாஸ்திரிகள் அவர்கள் தலைமையில் 1935-ல் ஸ்ரீரங்கத்தில் நடைபெற்ற ஏழாவது திராவிடவைத்திய சம்மேளன மருந்துக் கண்காக்ஷியிலும் எமது மருந்துகள் வைக்கப்பட்டு, வைத்திய நிபுணர்களால் பரீக்ஷிக்கப்பட்டு, மருந்துகள் உயர்ந்த முறையில் தயாரிக்கப்பட்டிருப்பதைப் பாராட்டி தங்கப்பதக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

# வாலிப சகோதரர்களே!

நமது உடலுக்கு ஜீவாதாரமாயுள்ள சுக்கிலத்தை விரயஞ்செய்து, அதனாலான கெடுதல்களுக்காளாகி பரதவிப்பவர்களை நோக்குங்கள்! அவர்கள் சதாகாலமும் அழுதகண்ணும்சிந்தியமூக்குமாகவன்றோவிருக்கின்றனர். இதைநிவர்த்திக்க சாமானிய வைத்தியர்களாலாகாது. எமது முன்னோர்களின் வெகுகால அனுபவத்தால் கண்டுபிடிக்கப்பட்ட,

வயோதிகனை வாலிபனாக்கும் தன்மையுள்ள
அதி அற்புத சுகந்தரும் மருந்து இருக்கின்றது.

அதுதான்

## தங்க பஸ்பம்.

ஒரு முறை உட்கொள்ளுங்கள்.

ஆஹா! அதன் பெருமையை என்றும் கொண்டாடுவீர்கள்.

இதைப்போல் தாதுபுஷ்டியையும், இந்திரிய பலத்தையும், மனோற்சாகத்தையும் தரக்கூடிய மருந்து வேறு இல்லை.

இது வாதபித்தசிலேத்துமதோஷங்களை சமப்படுத்தி, இழந்த பலத்தை திருப்ப அடையச்செய்து, இணையில்லா இல்லற சுகத்தைத் தரக்கூடியது. தேகசுகம் கெட்டு, நாடிகள் தளர்ந்து, மேக வெள்ளை, நீர்க்கடுப்பு முதலியவைகளால் பொறுக்கமுடியாத வேதனையுற்று, ஓலமிட்டுக்கொண்டிருந்த எண்ணிக்கையற்ற வாலிபர்கள் எமது தங்க பஸ்பம் உட்கொண்டதால் தேககாந்தியும், இந்திரிய வளர்ச்சியும், சரீர புஷ்டியும் அடைந்துள்ளார்கள். அவர்கள் பெற்ற அற்புத ஆண்மையை அவர்களின் ஸ்திரீகளே கொண்டாடுகின்றனர் என்றால் வேறு என்னதான் சொல்லவேண்டும்.

ஒருதடவை வருவித்து சோதித்தறியும்படி உங்களுக்கு ஞாபகமூட்டுகிறோம்.

24-நாள் பஸ்பம் விலை ரூ. 10—0—0.

---

**மலையப்பசாமி வைத்தியசாலை,**
**பழனி.**



# குழந்தையின் தேகசுகம்

பெற்றோர்களின்
உடல் நிலையைப் பொறுத்திருக்கிறது.

**வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு**
உள்ளவர்கள்

**சி. எம். சாமி**

## பிரமேக நிவாரணி

உபயோகியுங்கள்.

இது மகாக்கொடிய வியாதி. இதை ஆரம்பத்திலேயே கவனித்து வைத்தியம் செய்துகொண்டால் எளிதில் சுகமாகும். அப்படியின்றி விட்டுவிடுவதால் மேகம் உள்ளூரப் பரவி எல்லையற்ற கெடுதிகளை விளைவிக்கும். நாள் செல்லச்செல்ல கைகால் மடிப்புகளில் மேகநீர் தங்கி வீக்கமும் வலியும் உண்டாகி, எழுந்திருக்கவும் வேலைசெய்யவும் முடியாத நிலையில் வந்து முடியும். அப்போது நிவர்த்திப்பது கஷ்டசாத்தியமாகும். பிரபல வைத்யர்களே இவ்வியாதியைக் கண்டு மயங்குகிறார்களென்றால் சாதாரண வைத்தியர்களைப் பற்றி சொல்லவும் வேண்டுமோ.

இவ்வியாதிக்கென்றே நாங்கள் அதிக பிரயாசையெடுத்து "பிரமேக நிவாரணி" என்ற மருந்தைக்கண்டுபிடித்து எண்ணிக்கையற்ற வியாதியஸ்தர்களுக்குகொடுத்து குணப்படுத்தியிருக்கிறோம். இது நீர்த்தாரை எரிச்சல், நீர் இறங்கும்போது சுருக்சுருக்சென்று குத்துவது, நீரோடு விந்து கலந்து விழல், நீர்மஞ்சள் நிறமாயிருத்தல், தந்திமேகம், வெள்ளை, வெட்டை, இடுப்புவலி, நீரடைப்பு, கை கால்கள் எரிச்சல் முதலிய வியாதிகளை அறவே நீக்கி, நீர்த்தாரையிலுள்ள ரணங்களை ஆற்றி பூரண சுகத்தைத் தரக்கூடியது. இதைப்போல் வேறு எதுவும் குணந்தராது.

புட்டி 1-க்கு விலை ரூ. 2—0—0.

---

**மலையப்பசாமி வைத்தியசாலை,**
**பழனி S. I.**

## என் வியாதி நீங்கவில்லை?

நீங்கள் சாப்பிட்ட மருந்துகள்தான் கொஞ்சமா?
செலவு செய்த பணம்தான் கணக்கு உண்டா?
வியாதி ஒன்றிருக்க மருந்தொன்று சாப்பிட்டால்
எவ்வாறு குணமாகும்?

[illegible] உண்மையான மருந்துகள்
எம்மிடம் இருக்கின்றன.

189926

மூல வியாதி நீங்க

# நாகபஸ்பம்

உட்கொள்ளுங்கள். சுகம் பெறுவீர்கள்.

### ஆப்ரேஷன் செய்யவேண்டிய அவசியம் இல்லை.

மூலம், பவுத்திரம் முதலியவைகளால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த எத்தனையோ பேர் குணமடைந்து இருக்கின்றனர். இம்மருந்தால் மூல முளை தானே கரையும். சீழ் மூலம், ரத்த மூலம், தோல் மூலம், குத்தல், ஆசனத்துவாரத்தைச்சுற்றிலும் சிறு சிறு கொப்பளம் உண்டாகுதல், மலபந்தம் முதலிய சகல மூல ரோகங்களும் குணமாகும்.

24-வேளை பஸ்பம் விலை ரூ. 4—0—0.

---

### நற்சாட்சி.

ஐயா, 15-வருஷமாய் மூலரோகத்தால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த நான் தங்கள் நாகபஸ்பம் 1-மண்டலம் சாப்பிட்டதில் என் மூலரோகம் பூராவும் குணமாகி நல்ல பலமும் கொடுத்திருக்கிறது. இப்பஸ்பம் மூலரோகத்திற்கு தேவாமிர்தம் என்பதில் சந்தேகமே இல்லை.

(Sd.) தேவஆசீர்வாதம், பசுமலை.

---

## மலையப்பசாமி வைத்தியசாலை,
## பழனி.


## கட்டுரை எழுதுவோர்
### கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

1. விஷயங்கள் காகிதத்தின் ஒரே பக்கத்தில் சுத்தமாக மையினால் எழுதப்படவேண்டும். சித்தனில் மூன்று அல்லது நான்கு பக்கங்களுக்குள் அடங்கக்கூடிய விஷயங்கள் முதன்மையாகக் கவனிக்கப்படும்.

2. பிரதி ஆங்கில மாதம் பத்தாம் தேதி பத்திரிகை வெளிவரும். ஆசிரியரால் அங்கீகரிக்கப்படும் கட்டுரைகள் மட்டும் பிரசுரிக்கப்படும்.

3. சித்தனில் பிரசுரமாகும் எல்லா விஷயங்களின் காபிரைட் பிரசுரம் செய்வோர்க்கே உரிமையாகும்.

4. கட்டுரையாளர்களின் கருத்துகளுக்கும், அபிப்பிராயங்களுக்கும் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியாகார்.

5. நம்மி பிரசுரிக்கும் கட்டுரைகள் வேறெங்கேனும் உரிமையாக்கப்பட்டிருந்தால் அதற்குப் பத்திரிகாசிரியர் உத்தரவாதியன்று.

6. கட்டுரைகளை கூட்டவும், குறைக்கவும், ஏற்றுக் கொள்ள மறுக்கவும் பத்திரிகாசிரியருக்கு அதிகாரமுண்டு

7. அங்கீகரிக்கப்படாத கட்டுரைகளை திருப்பி அனுப்புவதாக உறுதி கூற முடியாது. தபால் தலை அனுப்பினால் மட்டும் திருப்பி அனுப்பப்படும்.


### ஏ[illegible]ண்டுகள் தே[illegible]வை.

எமது பத்[illegible]து எல்லா ஊர்களிலும் ஏஜண்டுகள் தே[illegible]து எழுதவும்.

விலா[illegible]:— மானேஜர்,
சித்[illegible]ன்,
[illegible] S I

வாலிபம் பெற

# மன்மதக் குளிகை

உபயோகியுங்கள்!

கலவியில் இன்பம் கொடுக்கும்.

எதிர்பாராத
தேகபுஷ்டி, போகசக்தி, வீரியவிர்த்தி
அடைவது நிச்சயம்.



என்றுமிராத
தைரியம், மனோற்சாகம், ஆரோக்கியம்
பெறுவது நிச்சயம்.

சரீரத்துக்கு வலுவைக்கொடுத்து,
ஆண்மையை அதிகப்படுத்தி, இரத்தத்தை
சுத்திகரித்து, தாதுவிர்த்தியையும்,
திடகா[illegible] ரோகம் பூரிவும் குண[illegible]ம்.
20-குளிகை வி[illegible] இப்பஸ்பம் மூலரோ[illegible]கை ரூ. 5.
[illegible]மே இல்லை

**Malayappasami Vaidyasala,**

**PALNI. S. I.**

[illegible]யானந்த பிரஸ், பழனி.



Edited [illegible]ted & Published by Dr. C. P. Sami
[illegible]Nityananda Press, Palni.